யாழ்ப்பாணம்
நாவாந்துறைப் படிப்பகம்

பக்கங்கள் எட்டு:
விலை ரூபா 5-00

Registered as a News Paper in SriLanka

# வலம்புரி
VALAMPURI

சங்கு 02 வள்ளுவர் ஆண்டு 2032 சித்திரை 22 சனிக்கிழமை 05-05-2001 தொலைபேசி: 3378 ஒலி: 136

அசல் 22 கரட் தங்க நகைகளுக்கு யாழ் நகரில் சிறந்த ஸ்தாபனம்
அர்ச்சனா ஜுவலர்ஸ்
118, கஸ்தூரியார் வீதி
176/1, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.
(கி-1895)

★ மாவனல்ல கலவரத்தை அடுத்து

# தலைநகர் கொழும்பில் இனமோதல்

# 25 முஸ்லிம்கள்; 5 பொலிஸார் காயம்!

## 7 பஸ்கள் சேதம்; பொலிஸார் கண்ணீர்புகைப்பிரயோகம்!

(நமது நிருபர்)

கடந்த புதன் கிழமை மாவனல்லயில் இடம் பெற்ற சிங்கள முஸ்லிம் கலவரங்களை அடுத்து நேற்று மருதானை ஜும்மா பள்ளி வாசல் தொழுகையின் பின் முஸ்லிம்களால் மேற்கொள்ளப் பட விருந்த ஊர்வலத்தை பொலிசார் தடுத்த போது பொலிசாருக்கும் முஸ்லிம் களுக்கும் இடையில் ஏற்பட்ட மோதலின் போது 20க்கு மேற்பட்ட முஸ்லிம் இளைஞர்களும், 5 பொலிசாரும்காயமடைந்துள்ளனர்
இம்மோதல் சம்பவத்தின்போது 7 பஸ்வண்டிகள் கலகக் காரர்களால் அடித்து நொருக்கப்பட்டும், ஒரு எரிபொருள் நிரப்பு நிலையமும் சேதமாக்கப் பட்டுள்ளன. இச் சம்பவத்தை அடுத்து சுமார் 50 பேர் வரை பொலிசாரினால் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

மாவனல்லவில் முஸ்லிம் களுக்கும், சிங்கள மக்களுக்கு மிடையே இடம்பெற்ற கலவ ரத்தை அடுத்து அதனைக் கண்டித்து நேற்று மருதானை கிராண்ட்பாஸ் புதுக்கடை, தெமட்டகொடை ஆகிய இடங்களில் உள்ள பள்ளிவா சல்களில்இருந்து ஊர்வலமாக புறப்படவிருந்த முஸ்லிம் களுக்கும் பொலிஸாருக்கு மிடையே பெரும் கலவரம் மூண்டது.

இதனை அடுத்து முஸ்லிம் கள் பொலிஸாரை நோக்கி கற்களினால் எறிந்தபோது

(8ம் பக்கம் பார்க்க)

## கலவரத்தை அடுத்து ஊரடங்கு உத்தரவால் பிரயாணிகள் அவலம்

(கொழும்பு)

கொழும்பு நகரில் முஸ்லிம் களுக்கும், பொலிஸாருக்கும் இடையே ஏற்பட்ட கலவரத் தையடுத்து கொழும்புமாவட்டம், களுத்துறை மாவட்டம் கம்பஹா மாவட்டம் ஆகிய இடங்களில் நேற்று மாலை ஆறுமணி முதல் ஊரடங்குச்

(8ஆம் பக்கம் பார்க்க)

## ஊரடங்கு தளர்வு

யாழ் குடாநாட்டில் இது வரை காலமும் இரவு 8.00 மணிமுதல் காலை 5.00 மணி வரை அமுலிலிருந்த ஊரட ங்கு உத்தரவு நேற்றிலிருந்து இரவு 9.00மணிமுதல் காலை 5.00 மணிவரை அமுல்படுத் தப்படுமென யாழ். பாது காப்புநடவடிக்கைத்தலைமை யகம் அறிவித்துள்ளது, (இ)

## மாவனல்ல சம்பவத்தை கண்டித்து நேற்று ஆர்ப்பாட்ட பேரணி

(கொழும்பு)

மாவனல்ல சம்பவத்தை கண்டிக்கும் வகையில் தென் கிழக்கு பல்கலைக்கழகமாண வர்களால் பெரும் ஆர்ப்பாட் டப் பேரணி ஒன்று நேற்று நடாத்தப்பட்டது.

ஆயிரக்கணக்கான மாண வர்கள் கலந்து கொண்டஇப் பேரணியின் போது கலவரங் களைக் கண்டிக்கும் சுலோ கங்களும்கோஷிக்கப்பட்டன.

கொளுத்தும் வெய்யிலை யும் பொருட்படுத்தாது மாணவர்கள் பலர் உணர்வு பூர்வமாக இவ் ஆர்ப்பாட் டத்தில் கலந்துகொண்டதாக அப்பகுதிச் செய்திகள் தெரி விக்கின்றன.

மேற்படி பல்கலைக் கழக உயிரியல் மாணவர்கள் இப் பேரணியை ஏற்பாடு செய்தி ருந்ததாக தெரிவிக்கப் பட் டுள்ளது.

இதே வேளை சம்மாந் துறையிலும் ஆயிரக்கணக் கான முஸ்லீம்கள் ஆர்ப்பாட் டப் பேரணியை நடாத்திய தாக நேற்றுப் பிந்திக் கிடைத்த தகவல் ஒன்றுதெரி வித்தது. (க-இ)

## அரசு - விடுதலைப்புலிகள் சமாதானப் பேச்சுக்கள் உடன் ஆரம்பிக்கப்பட வேண்டும்

### அமைதியை விரும்பும்குழுவினர் கோரிக்கை

அரசியல், மற்றும் மனிதா பிமான பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதில் நோர்வே அரசு வழங்கும் உதவியை பின் பற்றி சமாதானப் பேச் சுவார்த்தைகளை ஆரம்பிக்க அரசும், விடுதலைப் புலிகளும் முன்வர வேண்டும்;

இவ்வாறு சமாதானத்தை விரும்பும் குழுவினர் அரசாங் கத்தையும் விடுதலைப் புலி களையும் கோரியுள்ளனர் இவ் வேண்டுகோளில் பத்து உறுப் பினர்கள் ஒப்பமிட்டுள்ளனர் இவ் வேண்டு கோளில்மேலும் தெரிவித்திருப்பதாவது

இருதரப்பினரும்யுத்தநிறுத் தத்தை அறிவித்து சமாதான நடவடிக்கையை முன்னெடுத் துச் செல்ல வேண்டும் இந்த அடிப்படையில் அரசும் விடு தலைப்புலிகளும் ஒரு தீர்மா னத்தை மேற் கொண்டால் சமாதானத்தை நோக்கியநட வடிக்கைகளுக்கு உதவியாக இருக்கும் என்று அவர்கள் தெரிவித்துள்ளனர். (ம)

## விடுதலைப்புலிகள் இயக்கம் ஆரம்பிக்கப்பட்டு இன்றுடன் 25 வருடங்கள் பூர்த்தி

### வன்னியில் எழுச்சி விழா

(வவுனியா)

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் ஆரம்பிக்கப்பட்டு இன்றுடன் 25 வருடங்கள் பூர்த்தியாவதை முன்னிட்டு வெள்ளி விழாவை வன்னியில் கோலாகலமாகக்கொண்டாடு கின்றனர்.

1970ஆம் ஆண்டுநடுப்பகுதி

(8ஆம் பக்கம் பார்க்க)

## அதிரடிப்படை முகாம்மீது விடுதலைப்புலிகள் தாக்கு

(மட்டக்கட்ப்பு)

மட்டக்களப்பு பட்டிருப்பு சோதனைச்சாவடி மற்றும் மண்முனைத்துறை விசேட அதிரடிப்படை முகாம் மீது விடுதலைப் புலிகள் நேற்றுக் காலை மேற்கொண்டசினைப் பர் தாக்குதலில், இரண்டு விசேட அதிரடிப்படையின ரும் ஒரு பொலிஸாரும் படு காயமடைந்துள்ளன!

இதேவேளை வெலிகந்த வீதியிலுள்ள வாகனேரியில் படையினர் நிலைகள் மீது, விடுதலைபபுலிகள் உக்கிர தாக்குதல்களை மேற்கொண் டுள்ளாரென ஊர்ஜிதப்படுத் தப்படாத செய்திகள் தெரி விக்கப்படுகின்றன. (இ)

## முகமாலையில் தாக்குதல் படையினர் இருவர் பலி ஐவர் காயம்

(கொழும்பு)

முகமாலைப் பகுதியில் இராணுவத்தினரின் முன் னணிக்காவலரண் பகுதிமீது விடுதலைப்புலிகள் மேற் கொண்ட மோட்டார்குண்டு தாக்குதலின்போது இரண்டு படையினர் கொல்லப்பட்டும் 5படையினர் காயமடைந் துள்ளனர் என்று விசேட ஊட கத் தகவல்நிலையம் வெளி யிட்டுள்ள செய்தியில் தெரி வித்துள்ளது

அச்செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது விடுதலைப்புலிகளின் இத்

(8ஆம் பக்கம் பார்க்க)

## மேலும் 29 சடலங்களை புலிகள் கையளித்தனர்

(வவுனியா)

அக்கினிச்சுவாலை-1 இரா ணுவ நடவடிக்கை மூலம் தென்மராட்சியில் கைபபற் றிய மேலும் 29 இராணுவத் தினரின் சடலங்களை தமிழீழ விடுதலைப்புலிகள்நேற்றுகிளி நொச்சியில் வைத்து சர்வதேச செஞ்சிலுவைச்சங் கப் பிரதி நிதிகளிடம் ஒப்ப டைத்துள்ளனர்.

விடுதலைப்புலிகளின் அரசி யல் நிர்வாகப்பொறுப்பாளர் செல்வம் நேற்றுக்காலை9 00 மணிக்குமேற்படிசடலங்களை சர்வதேச செஞ்சிலுவைச் சங் கப் பிரதி நிதிகளிடம் ஒப்ப டைத்துள்ளார்

இதுவரை இராணுவத்தின

(8ஆம் பக்கம் பார்க்க)

## குமாரின்படுகொலைக்கு சிங்கள தீவிரவாதிகளே முக்கிய காரணம்

(கொழும்பு)

அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் தலைவரும் பிரபல சட்டத்தரணியுமான குமார் பொன்னம்பலத்தின் படுகொ லைக்கு சிங்களத் தீவிரவாதி களே காரணம் என்று அமெ ரிக்கத்திணைக்களம் அறிக்கை ஒன்றில் தெரிவித்துள்ளது.

அமெரிக்கத் திணைக் களத்தினால் வருடாந்

(8ஆம் பக்கம் பார்க்க)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

## சிறு விளம்பரம்

**சனி, செவ்வாய் மாற்றங்கள்**

எங்கும் விற்பனையாகின்றன ரூபா- 10/- யுத்தச் செவ்வாய், சேதுவுடன் 08பாகைதிய சேர்க்கை சனிபார் வையால் அமைதிப் பேச்சு ஸ்தம்பிதம் போர்மேகம் சூழும். கணிப்பாசிரியர் சத்யா-3 ஆம் மைல் ஆனைக் கோட்டை; T.P. 021 / 2753

(2996)

**போட்டோபிரதிகள்**

பாடசாலை மாணவர்கள், பல்கலைக்கழக பட்டதாரிகள் அனைவருக்கும் துல்லியமான போட்டோப்பிரதிகளை மிகவும் குறைந்த கட்டணத்தில் செய்து அத்துடன் புக்பைன்டிங்கும்செய்து கொள்ள: G.S.B தொலைத்தொடர்புநிலையம் 444/2நாவலர் வீதி பாப்பையாகடைச்சந்தி) யாழ்ப்பாணம். (கி-1955)


# இலங்கையில்மரணத்தைஏற்படுத்தும்

# மூன்றாவது நோயாக பக்கவாதம்

(கொழும்பு)

இலங்கையில் மரணத்தை ஏற்படுத்தும் மூன்றாவது நோயாக பக்கவாத நோய் காணப்படுவதாக புள்ளி விபரத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இலங்கையில் 2025 ஆம் ஆண்டளவில் 60 வயதுக்கு மேற்பட்டவர்களில் 10 வீதம் தொடக்கம் 20 வீதமானவர்கள் பக்கவாத நோயினால் பாதிக்கப்படுவர் எனவும் கணக்கிடப்பட்டுள்ளது.

இரத்த அழுத்த நோயாளர்களில் 48 வீதத்தினரையும் நீரிழிவு நோயாளர்களில் 20 வீதத்தினரையும் பக்கவாத நோய் பீடித்துள்ளதுடன்,

இந்நோய் குறித்த விழிப்புணர்வு மக்கள் மத்தியில் போதாமல் இருப்பதாகவும் கணக்கெடுப்புகள் மூலம் அறியப்பட்டுள்ளது. (உ)

## குடிசன மதிப்பீட்டின் போது தனி ஒருவர் பற்றிய 25 வினாக்கள் கேட்கப்படும்

[கொழும்பு]

ஜூன் ஜூலை மாதங்களில் திட்ட மிட்டவாறு குடிசனத் தொகைகணக்கெடுப்பு இடம் பெறும் வரை புள்ளி விபரத் திணைக்களத்தினால் வீடுகளில் ஒட்டப்பட்டுள்ள சிவப்பு நிறலேபல்களை அகற்றவேண்டாம் என அறிவிக்கப்பட்டுள்ளது.

மேற்படி கணக்கெடுப்பின் போது தனிநபர்ஒருவர் பற்றி 25 வினாக்கள கேட்கப்பட்டு தகவல்கள் திரட்டப்படும்.

இதன் காரணத்தால் அதிகாரிகள் வீடுகளுக்கு வரும் தினத்தன்று சகலரும் வீடுகளில் இருந்து ஒத்துழைப்பு வழங்க வேண்டும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. [உ[

## கூ. மொ. விற்பனை நிலையங்களூடாக 33 கோடி இலாபம்

இவ்வருடம் தமிழ்-சிங்கள புத்தாண்டை முன்னிட்டு கடந்த ஏப்ரல் 1 முதல் 12 ஆம் திகதிவரையிலான குறுகிய காலப்பகுதியினுள் நாட்டிலுள்ள 153 கூட்டுறவு மொத்த விற்பனை நிலையங்களினூடாக 33 கோடியே 50 இலட்சம் ரூபாவுக்கு மேல் இலாபம் கிட்டியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த வருட புத்தாண்டு காலத்தில் கூட்டுறவு மொத்த விற்பனை நிலையங்களினூடாகக் கிடைத்தஇலாபத்தை விட இவ்வருடம் 3 கோடி ரூபா அதிகமாக இலாபம் கிட்டியுள்ளது. (உ)

## ஈஸ்வரம்மா தினம்

[யாழ்ப்பாணம்]

யாழ்.பகவான் ஸ்ரீசத்திய சாயிசேவா நிலையத்தில் நாளை காலை 9 00 மணி முதல் ஈஸ்வரம்மா தினவிழா (சிறுவர்தினம்) நிகழ்வுகள் நடைபெறவுள்ளன.

கொடியேற்றம், உடற்பயிற்சி, ஓம்காரம், பஜனை, விளையாட்டுகள், சிறப்புச் சொற்பொழிவு, கலைநிகழ்வுகள் பரிசில் வழங்கல் என்பன இடம் பெறவுள்ளன.

[உ-103]

## தியானப் பயிற்சி

(யாழ்ப்பாணம்)

யாழ் பகவான் ஸ்ரீசத்திய சாயி சேவா நிலைய இளைஞர் பிரிவினர் மாதந்தோறும் நடாத்திவரும் தியானப் பயிற்சி நாளை காலை 7 00 மணிக்கு நிலைய மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

ஆன்மீக நாட்டமுள்ள அனைவரையும் கலந்துகொள்ளுமாறு இளைஞர் பிரிவு இணைப்பாளர் கேட்டுள்ளார். [உ-104]

## பொதுச்சபை கூட்டம்

இலங்கை- செஞ்சிலுவைச் சங்க யாழ். கிளையின் நல்லூர் பிரிவின் பொதுச்சபைக் கூட்டம் நாளை மு.ப 10 00 மணிக்கு திருநெல்வேலி வை.எம்.ஏச் ஏ மண்டபத்தில் பிரிவுத் தலைவர் தலைமையில் நடைபெறவுள்ளது.

அனைத்து உறுப்பினர்களையும் கூட்டத்துக்கு தவறாது சமுகமளித்து ஒத்துழைக்கும் வண்ணம் பிரிவின் செயலாளர் கேட்டுள்ளார். (உ-104)


## 31ம் நாள் நினைவஞ்சலி

அன்னை மடியில் 06 ★ 01 ★ 1960



ஆண்டவன் அடியில் 04 ★ 03 ★ 2001

செல்வன்

**அன்ரனி மரியதாஸ்**

(யோகன்)

குழந்தை உள்ளம் கொண்டு இன் முகத்துடன் அன்புக்கரம் கொடுத்து சேவைகள் புரிந்தவன் நீ உன் இழப்பை யாராலும் ஈடுசெய்ய முடியாது!
ஆம் முடியவே - முடியாது - - -

1999 இல் பயிற்சி பெற்ற
மறையாசிரியர்கள்

யாழ்-மறைக்கல்விநிலையம்

[கி-1952]


## ஈழத்திலும்.--

மோகத்தினின்றும் விடுவித்தான்என்று சொல்வது மிகையாகாது' என்று குறிப்பிட்டுள்ளார் வி.க. வின்கைஒருகாலத்தில்இளமைவிருந்துஎழுதிய து பெண்ணின் பெருமை, காந்தியடிகளும் மனித வாழ்க்கையும் முருகன் அருள் வேட்டால்'கிறிஸ்து அருள் வேட்டல் முதலிய அரிய நூல்களைத் தந்தது இவ்வாறு பிற்காலத்தே தமிழ்மொழி மூலம் பெயரும் புகழும்பெற்றவராக எளியவாழ்வே உற்றவராக எல்லோரிடமும் சாதுவானவராக பெண்களிடம் பெரும்மதிப்புக் கொண்டவராக உயர்ந்து நிற்பதற்குக் காரணமானவர் ஆசான் நா. கதிரைவேற்பிள்ளையவர்களே.

### ஆசிரியரும்.மாணவனும்

வி.க அவர்களும்தயது ஆசானாகிய சதாவதானி நா.கதிரைவேற்பிள்ளையவர்களைப்போன்றேநாவன்மை மிக்கவர். பேச்சாற்றலால் அவையைக் கட்டிப்போடக் கூடியவர். ஆசான் கதிரைவேலர் தமிழிலும் சைவத்திலும் மட்டுமே நாட்டம் காட்டினாரெனினும் அவர் மாணவன் வி.கவோ அரசியலில் காட்டிய நாட்டம் அதிகம். அரசியல் மேடைகளிலேயே வி.க தம் பேச்சாற்றலைப் பயன்படுத்தியது அதிகம். இருவருமே மொத்தத்தில் நாவலராகப், பாவலராக, சைவத்தமிழ்க் காவலராக விளங்கினார்கள். இருவருமே ஆசிரியராக, நூலாசிரியராக, உரையாசிரியராக, பதிப்பாசிரியராகக் கடமையாற்றித் தமிழிற்கு உரமூட்டியவர்கள். ஆசானோ சதாவதானி எனும் சிறப்பையும் கூடவே பெற்றவர். தமிழகத்திலே ஈழத்தவர் புகழ் மறைக்கப்பட்டது. அசானின் பெயர் மாணவருடன் ஒட்டியே பேசப்படுகிறது. எது எவ்வாறாக இருப்பினும் இருவரின் தமிழ்த் தொண்டும் அளப்பரியது.

நம் கதிரைவேற்பிள்ளையவர்களின் நினைவுகளுடனும் அவர் மாணவன் உணர்வுகளுடனும்கலந்து நம் அமுதத் தமிழை, அதன் கலாசாரத்தைப் பேண யாவரும் முன்வரவேண்டும்.

வாழ்க தமிழ்!

## பன்னிரு திருமுறை பாராயணம்

(யாழ்ப்பாணம்)

அகில இலங்கைத் திருமறை மன்றம் மாதாந்தம் பௌர்ணமி தினத்தில் நடாத்தி வரும் அகத்தியர் தேவாரத் திரட்டுமுற்றோதல், பன்னிரு திருமுறை பாராயணம் வரும் திங்கட்கிழமை காலை 8.00 மணிமுதல் யாழ்ப்பாணம் அரசடி வீதி கந்தர்மடம் செட்டியார்தாழ்ஸ்ரீஞானவைரவர் தேவஸ்தானத்தில் மன்றத் தலைவர் பண்டிதர் வ. பேரின்பநாயகம் தலைமையில் நடைபெறவுள்ளது.

அத்தோடு சித்திரைக் கஞ்சி வார்த்தலும்இடம்பெறும்[உ]

## விசேட பொதுக்கூட்டம

[யாழ்ப்பாணம்]

யாழ் மாவட்ட அரச பொதுச்சேவை கல்வி சாரா ஊழியர்கள் சங்க('கல்விப் பிரிவு) விசேட கூட்டம் நாளை ஞாயிற்றுக்கிழமை மு ப 9 30 மணிக்கு யாழ் வைத்தீஸ்வராக் கல்லூரியில் நடைபெறவுள்ளது (உ)

## இளமதம்பதிகள் வெட்டிக் கொலை

காலி மாவட்டத்தில் உள்ள கரந்தெனியருவன் என்ற இடத்தில் இளம் கணவனும் மனைவியும் வெட்டிக் கொலை செய்யப்பட்டுள்ளனர்.

மேதினத்தன்று இரவு இடம் பெற்ற இச்சம்பவத்திற்கு தனிப்பட்ட பகைமையே காரணம் எனக் கூறப்படுகிறது. (உ)


**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் இலங்கை**

**வெளிவாரிப் பதிவுகள் பரீட்சைகள் அலகு வெளிவாரிப்பரீட்சை**

**வணிகமாணி பகுதி/II: 1999**

மேற்படி பரீட்சை 2001.06.18 (திங்கள் கிழமை) ஆரம்பமாகின்றது.

(கி.1958) பதிவாளர்


## இராசி பலன்

5-5-2001
(சித்திரை 22, சனி)
திரயோதசி மு.இ10 29வரை
அத்தம் பி.ப 3.12 வரை
இராகுகாலம் 8.56 10.26
நல்லநேரம் 2.56- 4 26
சனிப்பிரதோச விரதம்.

**மேடம்**
பகைவரால்நன்மை, தொழில் விருத்தி, காரியம் கைகூடும், வியாதி நலமடைதல்.

**இடபம்**
புத்திரரால்கவலை, காரிய தாமதம், தாழ்வுநிலை, வியாபார மேன்மை.

**மிதுனம்**
தாய்வழி உறவு, கல்வி மேன்மை, மனச்சஞ்சலம், எதிர்பாராத நன்மை.

**கடகம்**
தனவரவு, பிரயாணம், வாக்கு பலிதம், அன்னியர் சந்திப்பு.

**சிங்கம்**
வாக்குக் கலகம், தனவிரயம், மாதர் நட்பு, முயற்சி தாமதம்.

**கன்னி**
ஆழ்ந்தசிந்தை, அதிகாரிகள் வெறுப்பு, காரியம் கைகூடும், நண்பர்கள் உதவி.

**துலாம்**
சயன சுகக் குறைவு, சுப செலவு, பிதாசிந்தை, காரிய அலைச்சல்.

**விருச்சிகம்**
தனலாபம், கீர்த்தி, முயற்சி மேன்மை, மனமகிழ்ச்சி.

**தனுசு**
அதிகாரம், காரியம் கைகூடும், தொழில் சிறப்பு, சுப நிகழ்வு.

**மகரம்**
கட்டுப்பாடு, புதிய திட்டம், பிரயாணம், முயற்சி தாமதம்.

**கும்பம்**
வீண் மனஸ்தாபம், அரச நன்மை, பிரயாண பயம், முயற்சிதாமதம்.

**மீனம்**
களஸ்திரசுகம், பிரயாணம், விருந்துபசாரம், காரிய நன்மை.

(பழைய நேரப்படி கணிப்பிடப் பட்டது)

**வளவன்**

## போரூட்நிறுவன உதவியுடன் வீடமைப்பு

(யாழ்ப்பாணம்)

போரூட் நிறுவனத்தின் நிதியுதவியுடன் எழுவைதீவில் 21 குடும்பங்களுக்கு வீடுகள் அமைத்துக் கொடுக்கப்படவுள்ளன.

இதற்கென மிகவும் வறிய நிலையிலுள்ள குடும்பங்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளன.

தெரிவு செய்யப்பட்ட ஒவ்வொரு குடும்பத்துக்கும் தலா 30 ஆயிரம் ரூபா போரூட் நிறுவனத்தினால் வழங்கப்படவுள்ளது. (உ)


## வீட்டுப்பணிப் பெண் தேவை

நல்லூரில் உள்ளஒரு வீட்டில் வேலை செய்வதற்கு பணிப் பெண் தேவை சுயவிபரங்களுடன் விண்ணப்பிக்கவும் சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும்.

தொடர்புகொள்ள வேண்டியமுகவரி
மே/பா விளம்பர இல115
15, வெள்ளாந்தெருயாழ்ப்பாணம்
[கி/ 1956]

## சத்திர சிகிச்சை பிரிவுக்கு தண்ணீர்த் தொட்டி

(மந்திகை)

பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்தியசாலை சத்திர சிகிச்சைப் பிரிவுக்கு பிராந்திய சுகாதார திணைக்களத்தினால் தண்ணீர்த் தொட்டி ஒன்று அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

கடந்தவாரம் சத்திர சிகிச்சைபிரிவிலிருந்ததொட்டி சேதமடைந்ததையடுத்து பதில் மாவட்ட வைத்திய அதிகாரி என். ஜே. ஞானசுதன் சுகாதார திணைக்களத்துடன் தொடர்பு கொண்டதையடுத்து ஆயிரம் லீற்றர் கொள்ளளவுடைய தண்ணீர்த்தொட்டிஒன்றுஅனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

(உ-23)

## வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபைக்கு இருமாடிக் கட்டடம்

(மந்திகை)

வடமராட்சிதெற்கு மேற்கு பிரதேச சபைக்கு நவீன முறையில் இருமாடிக் கட்டடம் அமைக்கப்படவுள்ளது.

மாலுசந்தியிலிருந்து நெல்லியடி வீதியில் அமையவுள்ள கட்டடத்திற்கான காணி ஏழு இலட்சம் ரூபா செலவில் கொள்வனவு செய்யப்பட்டுள்ளது.

சகல வசதிகளும் கொண்ட இவ் இருமாடிக் கட்டடம் அமைப்பதற்காக பிரதேச சபை நிதியில் ஒரு கோடி ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

இவ் வருட இறுதியில் இக்கட்டடம் அமைப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளதாக பிரதேச சபை அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

(உ-23)

## படைவீரர் மீது துப்பாக்கிப் பிரயோகம்

(மந்திகை)

சிறுநீர் கழித்து விட்டு வந்த படைவீரர்மீது காவல்கடமையில் ஈடுபட்டிருந்த படைவீரர் மேற்கொண்டதுப்பாக்கிப்பிரயோகத்தில் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகியவர் மரணமானார்.

கடந்த 26 ஆம் திகதி நள்ளிரவு உடுப்பிட்டி இராணுவ முகாமில் இச்சம்பவம் நடைபெற்றது.

இச்சம்பவத்தில் ஒலுவில என்ற இடத்தைச் சேர்ந்த ஆர். எம். எஸ். சுராஜ் (வயது26) என்ற படைவீரரே பலியாகியுள்ளார்.

இராணுவ முன்காப்பரணில் கடமையில் ஈடுபட்டிருந்த படை வீரர் சிறுநீர்கழித்து விட்டு வந்தவேளைஇராணுவ முகாமுக்குள் காவல் கடமையிலிருந்த படை வீரர் ஆள் நடமாட்டத்தை கண்டு துப்பாக்கி பிரயோகம் மேற்கொண்டதில் இச்சம்பவம் இடம்பெற்றதாக விசாரணையின் போது தெரிவிக்கப்பட்டது.

சம்பவம் தொடர்பான விசாரணையைபருத்தித்துறை மாவட்ட நீதிமன்ற நீதிபதி எஸ். ஏ. ஈ. ஏகநாதன் மேற்கொண்டார்.

பிரேத பரிசோதனையை கொழும்பு மாவட்ட சட்ட வைத்திய அதிகாரியும் மரண விசாரணையை கொழும்பு நகர திடீர் மரணவிசாரணை அதிகாரியும் மேற்கொண்டு அறிக்கையை நீதிமன்றில்சமர்பிக்குமாறு பொலிஸாருக்கு நீதவான் உத்தரவிட்டார். சடலம்கொழும்புக்கு அனுப்பி வைக்கப்பட்டது. [உ-23]

# சந்திரிகா தலைமையில் விஜயின் சிலை திறப்பு யாழில் இடம்பெறும்

## வேல்முருகு தங்கராசா உறுதிபட தெரிவிப்பு

[அரியாலை]

இன்னும் ஒரு மாதகாலத்தில் அமரர் விஜயகுமாரதுங்காவின் சிலையை திட்டமிட்டவாறு யாழ்ப்பாணத்தில் நிறுவி, எமது கட்சித் தலைவியும் நாட்டின் ஜனாதிபதியுமான சந்திரிகா குமாரதுங்காவே அதனைத் திறந்து வைப்பார் என ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் யாழ். மாவட்ட அமைப்பாளர் வேல்முருகு தங்கராசா தெரிவித்தார்.

நேற்றைய தினம், திட்டமிட்டவாறு விஜயகுமாரதுங்கவின் சிலை நிறுவுவதற்கான அடிக்கல் நாட்டு விழா இடம்பெறாது போனாலும், அங்கு வருகை புரிந்த பொது மக்கள் மத்தியில் கட்சிப் பணிமனையில் உரையாற்றிய வேளை வேல்முருகு தங்கராசா இதனைத் தெரிவித்தார்.

அடிக்கல் நாட்டல் ஒத்திவைப்புக்கான காரணம் பற்றி விளக்குகையில், ஆயுதம் ஏந்திய சிலரின் அடாவடித்தனங்களில் இருந்து பொதுமக்களைக் காக்கும் வகையிலேயே ஒத்திவைப்பு இடம்பெற்றதாக குறிப்பிட்டார்.

தவிர ஜனாதிபதியின்பிறந்த தினமான ஜூன் மாதம் 29 ஆம்திகதி அவர் யாழ் வருகை புரிந்து, தனது கையினாலேயே வறுமைக்கோட்டின் கீழ் வாழும் மக்களுக்கு உதவு பொருட்கள் வழங்குவார் என்றார். (உ-106-10)

## அறநெறிப் பாடசாலை

(ஏழாலை)

மல்லாம் நீலியம்பனை விநாயகர் ஆலயத்தில் அறநெறிப்பாடசாலை ஒன்றை தெல்லிப்பழை பிரதேச செயலாளர் திருமதி ப. திலகநாயகம் விளக்கேற்றி ஆரம்பித்து வைத்துள்ளார். இந்த அறநெறிப் பாடசாலைக்கானஏற்பாடுகளை வலி வடக்கு பிரதேச செயலக காலசார உத்தியோகத்தரும் ஆலய பரிபாலன சபையினரும் மேற்கொண்டிருந்தனர்.

தற்சமயம் தெல்லிப்பழை பிரதேச செயலக பிரிவில் எட்டு அறநெறிப்பாடசாலைகள் நடைபெற்றுவருவதாகவும் தெரிவுக்கப்படுகின்றது.

(உ-12)

## சமுர்த்திச் சங்கங்கள் அமைப்பது தொடர்பான கலந்துரையாடல்

(வட்டுக்கோட்டை)

யாழ். மாவட்டத்தில் சமுர்த்திச் சங்கங்கள், வங்கிச் சங்கங்கள் போன்றவற்றை அமைப்பது தொடர்பான கலந்துரையாடல்ஒன்றுயாழ் மாவட்ட சமுர்த்தி உதவி ஆணையாளரால் சகல சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கும் நடத்தப்பட்டு வருகிறது.

சமுர்த்தி சங்கம், வங்கிச் சங்கங்கள், பேரவை ஆகிய அமைப்புகள் உருவாக்கப்படுவதற்கு ஆரம்ப கட்ட நடவடிக்கையாக சகல கிராம அலுவலர் பிரிவிலிருந்தும் சமுர்திச் சிறு குழுக்கள் உருவாக்கப்பட்டு அதனூடாகவே சமுர்த்திச் சங்கங்கள், வங்கிச் சங்கங்கள் உருவாக்கப்படவிருக்கின்றன.

(உ-24)

## மா, தென்னைமரங்களுக்கு மருந்து தெளித்தல்

[யாழ்ப்பாணம்]

வடமராட்சி பிரிவு கமநல சேவை நிலையத்தின் மருந்து தெளிக்கும் பிரிவினர் துன்னாலை வடக்கு, துன்னாலை மத்தி பகுதிகளில் மருந்து தெளிக்கும் பணியைஆரம்பித்துள்ளனர்.

தென்னை மரங்களில் குரும்பைகளில் ஏற்படும் பாதிப்பைக் கட்டுப்படுத்தவும், தத்து பூச்சிகளால் ஏற்படும் தாக்கங்களை தடுக்கவும் மாமரங்களில் பூஞ்சணத் தாக்கத்தை தவிர்க்கவும் சிறந்த மருந்து தெளிப்பு நடவடிக்கையைப் பயன் படுத்திக் கொள்ளுமாறு துன்னாலை வடக்கு கிராம சேவையாளர் சம்பந்தப்பட்ட மக்களை கேட்டுள்ளார். [உ]

## முறைப்பாட்டு பதிவுடன் விசாரணைக்கு அழைப்பு

(யாழ்ப்பாணம்)

காணாமற் போனோர் தொடர்பான விசாரணைகளை நடத்தி வரும் விசேட புலனாய்வுப் பிரிவினர் பின்வரும் காணாமற் போனோரின் உறவினர்கள் மற்றும் சாட்சிகளை முறைப்பாட்டுப் பதிவுப் பிரதிகளுடன் சமுகமளிக்குமாறு அறிவித்துள்ளனர்.

யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையம்

★ செல்லையா பாலசிங்கம் கைதடி வீதி, சாவகச்சேரி.

★ ராஜரட்ணம் சிறிதரன் டச்சு வீதி கோப்பாய் தெற்கு

★ அருளானந்தம் கனகரத்தினம் அரசடி வீதி, இருபாலை கோப்பாய்

★ தங்கவேலு சந்திரகுமார் தனங்கிளப்பு வீதி, சாவகச்சேரி

★ குணபாலசிங்கம் பாலேந்திரம் 37. புங்கங்குளம் வீதி அரியாலை

சாட்சி: நவரட்ணம் புண்ணியமூர்த்தி

★ சாவரிமுத்து அன்ரன் ஜெயக்குமார் 136, ஆத்திசூடி வீதி, கந்தர்மடம் யாழ்ப்பாணம்.

சாட்சி:- அருளம்பலம் அரியாலை

★ சந்தையா அருள்தரன் 22/15, வைரவர் கோவில் வீதி, மேற்கு அரியாலை

சாட்சி:- சந்திரகுமார் 21, கலைமகள் வீதி, அரியாலை மேற்கு

சாட்சி:- அரசகுளம் தேவசிறி அபபிள 33, ஆசீர்வாதம் வீதி, நல்லூர் யாழ்ப்பாணம்.

★ பரர ஜசிங்கம் கஜேந்திரன் 21/5, வைமன் வீதி, யாழ்ப்பாணம்.

சாட்சி:- தேவராணி குடும்ப நல சேவையாளர் யாழ். மாநகரசபை நல்லூர் யாழ்ப்பாணம். (உ-10)

## அவசரகால சட்ட விதிகள் குறித்து மீள மக்களுக்கு அறிவுறுத்து

(கொழும்பு)

இலங்கையில் கடந்த வருடம் மே மாதம் 3 ஆம் திகதி அமுல்ப்படுத்தப்பட்ட அவசர காலச் சட்ட விதிகள் குறித்து பொதுமக்களுக்கு மீண்டும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இந்த அவசரகாலச் சட்டத்தின் 26 வது இலக்க நிபந்தனையின் படி அரசாங்கத்தையும், ஜனாதிபதியையும் அவமதிக்கும் விதத்தில் எவரும் பேசவோ அன்றி எழுதவோ அனுமதி கிடையாது

துரோக எண்ணங்களோடு செயற்பட்டால் அது கடும் குற்றமாகக் கருதப்படும்.

அவசரகாலச் சட்டத்தின் படி குற்றங்கள் புரிகின்றவர் 3 மாதகாலச் சிறைத்தண்டனைக்கு உள்ளாவதுடன்,

இச் சிறைத்தண்டனை 20 வருடங்கள்வரை செல்லுபடியாகக்கூடியது. (உ)

## ஆங்கில படிப்புகள் வட்ட மாதாந்தக் கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்]

யாழ்ப்பாணம் ஆங்கிலப் படிப்புகள் வட்டம் மாதாந்தோறும் நடாத்திவரும் கருத்தரங்குகள் வரிசையில்,

நாளை ஞாயிற்றுக்கிழமை பி.ப.2.30 மணிக்கு நாவலர் கலாசார மண்டபத்தில் இலக்கிய ஊடகமாகச் சிறுகதை என்ற விடயத்தில் கருத்துரைகள் இடம்பெறும்.

சிறுகதைக்கான அறிமுகம் என்ற தலைப்பில் எஸ். பத்மநாதன், சிறுகதை எழுதும் கலை என்ற தலைப்பில் எ சாந்தன், சிறுகதை ஆக்க கர்த்தாவின் சிந்தனைகள் என்ற தலைப்பில் கே சட்டநாதன் ஆகியோர் கருத்துரை வழங்குவர். (உ)

உயிரியல் . . .

(4ம் பக்கத் தொடர்ச்சி)

iv) இறகு/அலகு/உட்குழிவான என்புகள்
v) நீர்க்கலன் தொகுதி/குழாய்க்கால்/தாய்க்கறதகடு/புன்பாதம்:

c) i) தம்மிடையே பெரும்பாலான இயல்புகளில் ஒத்தும் சில இயல்புகளில் வேறுபட்டதுமான அங்கிகளுக்கிடையே இயற்கையாக இனக்கலப்பு நிகழ்ந்து வளமான எச்சங்களை தோற்றுவிக்கும் அங்கிக்கூட்டம்;
ii) Homo sapiens
iii) ஒத்த அடிப்படை அமைப்பையும் ஒத்த உற்பத்தியையும் கொண்ட சட்டமைப்புக்கள்
iv) நத்தை
v) Platyhelminthes

| | சுவாசக்கட்டமைப்பு | கழிவுக்கட்டமைப்பு |
|---|---|---|
| vi) i) | மேற்றோல்/உடற்சுவர் | கழிநீரகம் |
| ii) | பூக்கள் | பசுஞ்சுரப்பி/உணர்கொம்புச்சுரப்பி |
| iii) | நுரையீரல் | சிறுநீரகம் |
| iv) | நுரையீரல் | சிறுநீரகம் |
| v) | நுரையீரல் | சிறுநீரகம் |

வினா-3

d) அ) i) Watson and Crick
ii) Deoxyribonucleotide
iii) Deoxyribose, Phosphate group, N உப்புமூலம்;
iv) அடினின், குவானின்
v) பியூரின்

ஆ i) RNA தொகுப்பு DNA இரட்டித்தல்

ii)

| வகை | உற்பத்தியாகும் இடம் | தொழில் |
|---|---|---|
| MRNA | கரு | செய்திகாவுதல் |
| tRNA | கரு | அமினோஅமிலங்களைக்காவுதல் |
| rRNA | புன்கரு | புரதத் தொகுப்பு |

iii) ATGGCTATG-நிரப்பு இழை
AUGGCUAUG-MRNA இழை
iv) செய்தியை வழங்கல்
v) அமினோ அமிலங்களின் எண்ணிக்கை
அமினோ அமிலங்களின் வகை
அமினோ அமிலங்களின் ஒழுங்கு

(அடுத்த சனி தொடரும்)

## செய்தித் துளிகள்

### அவசர கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

வேலையற்ற பட்டதாரிகள் சங்கத்தின் நிர்வாக சபை உறுப்பினருக்கான அவசர கலந்துரை யாடல் 7ஆம் திகதி திங்கட்கிழமை காலை 9.00 மணிக்கு இல 34, மாரியம்மன் கோவில வீதி, திருநெல்வேலி என்ற முகவரியில் அமைந்துள்ள சங்க அலுவலகத்தில் நடை பெறவுள்ளது. [உ]

### முழுநேரப் பயிற்சி நெறிகள்

(கல்வயல்)

இலங்கை ஜேர்மன் தொழில் நுட்பயிற்சி நிறுவகம், தேசிய தொழில் பயிலுநர் திட்டத்தின் கீழ் முழு நேரப் பயிற்சி நெறிகளுக்கு பயிலுநர்களைச் சேர்த்துக் கொள்வதற்காக விண்ணப்பங்களைக் கோரியுள்ளது.

மோட்டார் எந்திரவியல், வாயுச்சீராக்கல் குளிரூட்டல், மின்சக்தியியல், இயந்திரவியல் டீசல் இயந்திரவியல், வாகன மின்சாரவியல், ஒட்டுவேலை ஆகிய பயிற்சி நெறிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. விண்ணப்பிக்க விரும்பும் ஆண், பெண் இருபாலரும் ஜூன் மாதம் 7 ஆம் திகதிக்கு முன்னர் இலங்கை ஜேர்மன் தொழில் நுட்ப பயிற்சி நிறுவக ஆளணி முகாமையாளருக்கு உரிய படிவத்தில் விண்ணப்பிக்க வேண்டும் என ஆளணி முகாமையாளர் அறிவித்துள்ளார். (உ-1!1)

### செயற்பாடுகள் பரிசோதனை

(மந்திகை)

சுகாதார சேவைகள் மாகாணப் பணிப்பாளர் அலுவலகத்தில் இருந்து வந்துள்ள அதிகாரிகள் குழு, பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்தியசாலையின் செயற்பாடுகளை பரிசோதித்து வருகின்றனர்.

இக்குழுவில் மாகாண சுகாதார பிரதம மருத்தாளர், நிகழ்ச்சித்திட்ட உத்தியோகத்தர் ஆகியோர் இடம்பெற்றுள்ளனர்.

இக்குழு எதிர்வரும் 17 ஆம் திகதிவரை இக் கடமைகளை மேற்கொள்ளும். [உ-23]

### தமிழ் விழா இன்று ஆரம்பம்

(ஈச்சமோட்டை)

யாழ்ப்பாணம் திருமறைக் கலாமன்றம் கொழும்பு, திருகோணமலை, ஹபபுத்தளை திருமறைக்கலாமன்ற கலைஞர்களுடன் இணைந்து நடத்தும் தமிழ்விழா இன்று மாலை 6.00 மணிக்கு கலா மன்றத்தில் ஆரம்பமாகவுள்ளது.

மாலை 6.00 மணிக்கு மங்கள விளக்கேற்றலுடன் ஆரம்பமாகி,

மன்றக் கலைஞர்களின் ஜீவப் பிரயத்தனம் எனும் நவீன நாடகம் இடம்பெறும். (உ-59)

### கத்தரிக்காய் விலை உச்சம்

(சங்கானை)

சங்கானைச் சந்தையில் கத்தரிக்காயின்விலை என்றுமிலாதவாறு மிக உயர்வாகக் காணப்படுகின்றது.

ஒரு கிலோ கத்தரிக்காய் 75 ரூபாவாக விற்கப்படுகின்றது

அண்மையில் தொடர்ந்து பெய்த மழையினால் கத்தரியில் கண்ணடைப்பு நோய்ஏற்பட்டதனால் கத்தரிக்காய் விளைச்சல் மிகவும் குறைவாக வுள்ளதாக விவசாயிகள் தெரிவிக்கின்றனர். (உ-123)

### கொமிசியக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ் மறை மாவட்டமரியாயின் சேனையின் மாதாந்த கொமிசியக் கூட்டம் நாளை ஞாயிற்றுக்கிழமை மு. ப 10.00 மணிக்கு யாழ். மறைக் கல்வி நடு நிலைய மண்டபத்தில் நடை பெறவுள்ளது. (உ)

### இறுதிப் போட்டிகள்

(ஏழாலை)

வலி வடக்குப் பிரதேச இளைஞர் கழகங்களின் சம்மேளனம் இளைஞர் கழகங்களுக்கிடையே நடாத்தி வந்த விளையாட்டு நிகழ்வின் இறுதிப்போட்டிகள் நாளை ஞாயிற்றுக் கிழமை காலை 8 மணி தொடக்கம் மல்லாகம் ஸ்ரீ பாஸ்கரன் விளையாட்டு அரங்கில் நடை பெறவுள்ளது. (உ-12)

### சிறுவனைக் காணோம்

(யாழ்ப்பாணம்)

கடந்த மாதம் 18 ஆம் திகதி தொண்டைமானாறுப் பகுதியில் வசிக்கும் தாய் தந்தையரைப் பார்க்க வெனக் கூறிச் சென்ற 83/13, 3ஆம் ஒழுங்கை பருத்தித்துறை வீதி யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த செல்வம் சஞ்சீவ் (வயது-16) என்ற சிறுவனைக் காண வில்லை என மனித உரிமைகள் ஆணைக்குழுவில் உறவினர்களால் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (உ-10)

### வறிய சிறுவர்க்கு உதவு பொருள்

(ஏழாலை)

வலி- வடக்கு பிரதேச மட்ட சிறுவர் கண்காணிப்புக் குழுவினர் யாழ். மாவட்ட சிறுவர் கண்காணிப்புக் குழுவினரால் வழங்கப்பட்ட நிதியில் இருந்து வலி வடக்கு பிரதேசத்திற்குட்பட்ட பகுதியில் தாய், தந்தை அல்லது இருவரையும் இழந்து வறுமைக் கோட்டின் கீழ் வாழ்கின்றவர்கள் என இனம் காணப்பட்ட 100 சிறுவர்களுக்கு தைத்த பாடசாலைச் சீருடையும் 75 சிறுவர்களுக்கு அப்பியாசக் கொப்பிகளும் பாடசாலை உபகரணங்களும் வலி வடக்கு பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் வைத்து வழங்கப்பட்டது. (உ-12)

### குழுத்தெரிவு

(மந்திகை)

வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச செயலகத்திற்கு நிரந்தர கட்டிடம் அமைப்பதற்கான செயற்பாடுகளை மேற்கொள்வதற்கான குழு அமைக்கப்பட்டுள்ளது.

பிரதேச செயலர் செ. ஸ்ரீநிவாசன் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் கட்டிடம் அமைப்பதற்காக கிராம சேவையாளர் பிரிவுகளிலிருந்து தெரிவுசெய்யப்பட்ட நூறுக்குமேற்பட்ட பிரதிநிதிகள் கலந்துகொண்டனர். (உ-23)

### பொதுக் கூட்டம்

(மந்திகை)

சாவகச்சேரி பிரதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் வருடாந்த நிர்வாகத் தெரிவும் பொதுக் கூட்டமும் நாளை ஞாயிற்றுக்கிழமை மு.ப 9.30 மணிக்கு கரவெட்டி திரு இருதயக் கல்லூரி மண்டபத்தில் தலைவர் ரி. மகேஸ்வரன் தலைமையில் நடைபெறவுள்ளது. (உ-23)

---

## க. பொ. த உயர்தர மாணவர்க்கான

# உயிரியல்

## பாட வினாக்கள் - 12

### ஆசிரியர் கே. சுகந்தன் B.Sc

#### அமைப்புக் கட்டுரை வினாக்கள்

**வினா - 1**

1) a) மாசடைந்த குடிநீரில் காணப்படக்கூடிய நுண்ணங்கிகளுள் ஒன்று கொலிபோம் பக்ரீறியா ஆகும். இது தவிர ஏனைய நுண்ணங்கிகள் 3 தருக?

b) கொலிபோம் பக்ரீறியாக்களின் சிறப்பியல்புகள் 5 தருக?

c) கொலிபோம் பக்ரீறியாக்கள் 5 தருக?

d) 1) a) இல் குறிப்பிடப்படும் நுண்ணங்கிகளைப் பரிசோதனை மூலம் நீரில் இருப்பதைக் கண்டறிவதற்குக் கடினமாக அமையும் காரணங்கள் மூன்று தருக?

e) நுண்ணங்கிகள் பொதுவாக எதனூடாக நீரை அடைந்து மாசாக்கின்றன?

f) குடிநீரில் தொற்றும் நுண்ணங்கிகளால் ஏற்படும் பொதுவான நோய்கள் 4 தருக?

g) இயற்கைப் படியிறக்கம் என்றால் என்ன?

h) குடிநீரின் தரம் உறுதியாக்கப்படும் பரிசோதனைச் சாலைகள் இரண்டு தருக?

i) மேற்கூறிய சாலைகளில் நீர் சுத்திகரிப்புப் படிமுறையின் அடிப்படைப் படிகளையும் தத்துவங்களையும் தருக?

j) நீர் குறிப்பிட்ட மாசடைந்த நீரில் உள்ள பரிசோதனைக்குரிய அங்கி என்ன அளவுக்கு மேல் நீரில் காணப்பட்டால் அது குடிப்பதற்கு உகந்ததல்ல?

k) கொலிபோம் சோதனையில் உள்ள பிரதான படிமுறைகளைத் தருக? இங்கு கையாளப்படும் தத்துவங்களைச் சுருக்கமாக தருக?

**வினா - 2**

a) குடிநீரைத் தூய்மைப் படுத்துவதில் உள்ள படிமுறைகளைத் தருக?

b) ஒவ்வொரு படிமுறையிலும் உள்ள தத்துவங்களையும் தருக?

c) கழிவுநீர் இயற்கை நீர் நிலைகளுள் விடப்படுவதால் ஏற்படும் பிரச்சினைகளைத் தருக?

d) கழிவுநீரைச் சுத்திகரிக்கும் நிலையத்தில் கையாளப்படும் படிகளையும் தத்துவங்களையும் தருக?

e) மேலே d) இல் குறிப்பிட்ட படிமுறைகளின் பின்பு பெறப்படும் திண்மக் கழிவுப் பொருட்களின் பயன்பாடுகள் 3 தருக?
இங்கு ஏதாவது நுண்ணங்கிகள் பயன் படுத்தப்படுமாயின் அவற்றையும் குறிப்பிடுக?

f) பக்ரீறியாக்களின் அனுசேப முறைகள் மூலம் தரம் குறைந்த உலோகக் கருக்களில் இருந்து பிரித்தெடுக்கப்படும் உலோகங்கள் இரண்டு தருக?

g) மேலே F) இல் சம்பந்தப்படும் பக்ரீறியாக்கள் இரண்டு தருக?

h) நுண்ணங்கி நீர் அரித்தல் என்றால் என்ன?

**வினா - 3**

a) தொற்றுநோய் என்றால் என்ன?

b) மனிதனில் தொற்று நோய்களை விளைவிக்கும் தொகுதிகள் நான்கினைப் பெயரிடுக?

c) நோய் விளைவிக்கின்ற பக்ரீறியா ஒன்றினால் ஒரு மனிதன் தொற்றுவிக்கப்படும் போது அங்கு செயற்படுத்தப்படும் எதிர்ப்புப் பொறிமுறைகளைச் சுருக்கமாகத் தருக?

d) நுண்ணுயிர்கொல்லிகள் என்றால் என்ன?

e) மருத்துவத்திலே பொதுவாகப் பயன்படுத்தப்படும் இரு நுண்ணுயிர் கொல்லிகளைப் பெயரிடுக?

f) உணவு பழுதடையாது பாதுகாப்பதில் நுண்ணுயிர் கொல்லிகள் பாவிக்கப்படுவதில்லை என்பதற்குச் சுருக்கமான விளக்கம் தருக?

g) நுண்ணுயிரினவியலில்கிருமி அழித்தல் என்ற பதத்தைப் பற்றி நீர் விளங்குவது யாது?

h) குறிப்பான சில உணவுவகைகளையும் குடிபான வகைகளையும் பக்குவப்படுத்த ஏன் கிருமி அழித்தல் முறையை விட பாச்சர்முறை விரும்பப் படுகிறது?

i) ஆய்வுகூடத்தில் பெற்றிக் கிண்ணம், போசணை ஏகார் ஊடகம், வெப்ப இளக்கமடையும் பொருட்களைக் கொண்ட திரவ ஊடகம் ஆகியவற்றைக் கிருமிபழித்தல் செய்வதற்கு நீர் கையாளும் முறைகளைத் தருக?

j) பக்ரீறியாவைக் கொண்ட திரவவளர்ப்பும் திண்ம வளர்ப்பும் உமக்குத் தரப்பட்டுள்ளன. மெதலின் நீலம் போன்ற எளிய சாயத்தினால் இந்த பக்ரீறியாக்களில் சிலவற்றை எவ்வாறு சாயம் ஊட்டுவீர் எனச் சுருக்கமாக விளக்குக?

k) நுண்ணங்கி பழுதாக்கத்தால் உணவில் ஏற்படக்கூடிய ஆறு விரும்பத்தகாத விளைவுகளைத் தருக?

---

## விடைகள்

வினா இல-08

**வினா-1**

| | | | | |
|---|---|---|---|---|
| 1) B | 2) G (பொஸ்பரஸ்) | 3) C | 4) H | 5) F |
| 6) A | 7) D | 8) H | 9) A | 10) D/B |

**வினா-2**

1) a) i) நடுக்கோட்டு நீள்பக்க அச்சினூடாகச் செல்லும் எந்தவொரு அச்சினூடாக இருசம பாதிகளாகப் பிரிக்கப்படும் உடல்

ii) Coelenterate oREchinodermata

iii) இருபக்கச் சமச்சீர்

vi) இடைத்தோற்படையால் சூழப்பட்ட அறை

v) Annelida

d) i) அழன் மொட்டுச் சிறைப்பை

ii) சுவாலைக்கலம்

iii) வறுகி/தசைசெறிந்த பாதம்

(3ஆம் பக்கம் பார்க்க)

## இன்று ஒரு தகவல்

# சுருக்கமும் உருக்கமும்

இரேக்க நாட்டில் ஸ்பார்ட்டா நாட்டுக்காரர்கள் எப்பொழுதும் சுருக்கமாகவே பேசுவார்கள். தங்களைப் போன்றே பிறரும்பேச வேண்டும் என்று எதிர்பார்த்தனர். அந்த நாட்டிற்குப் பக்கத்திலுள்ள ஒரு தீவில் நான்கைந்து ஆண்டுகளாக மழை பெய்யாததால் கடும் பஞ்சம் நிலவியது. அந்நாட்டு அரசன் பேச்சாற்றல் மிகுந்த தூதன் ஒருவனை ஸ்பார்ட்டா நாட்டிற்கு உதவி கேட்டு அனுப்பினான். வந்த தூதனை ஸ்பார்ட்டா நாட்டு மக்கள் வரவேற்றனர் அந்தத் தூதன் கடல் மடைதிறந்த வெள்ளம் போல் தங்கள் நாட்டு மக்கள் பஞ்சத்தால் படுந்துன்பத்தை இரண்டு, மூன்று மணி நேரம் உருக்கமாக எடுத்து உரைத்தான்.

பேச்சை முடித்ததும், ஸ்பார்ட்டா நாட்டினர் தம் மக்களுக்குப் பெரும் உதவி செய்வார்கள்' என்று எதிர்பார்த்தான் அவன் ஆனால் அவர்களோ ஒன்றும் பேசாமல் கலையத் தொடங்கினர். அதிர்ச்சியுற்ற தூதன் அவர்களில் முதியவர் ஒருவரை நிறுத்தி 'ஏதும் உதவி செய்வதாகச் சொல்லாமல் செல்கிறீர்களே' என்று கேட்டான். அதற்கு அவர், நீ நீண்ட நேரம் பேசினாய் உன் பேச்சின்தொடக்கம் எங்கள் நினைவுக்கு வந்தால் இடைப்பகுதி மறந்து விடுகிறது அதேபோல் இடைப்பகுதி நினைவுக்கு வந்தால் முடிவுப்பகுதியும் முடிவுப் பகுதி நினைவுக்கு வந்தால் தொடக்கப் பகுதியும் மறந்து விடுகிறது ஆக மொத்தத்தில் நீ என்ன பேசினாய் என்றே தெரியவில்லை. எங்களால் என்ன செய்ய முடியும்? என்றார்.

இதைக் கேட்ட தூதன் ஏமாற்றத்துடன் தன் நாட்டிற்குத் திரும்பி வந்து நடந்ததையெல்லாம் சொன்னான். அத்தீவுக்கு உரிய அரசன் வேறொரு தூதனை ஸ்பார்ட்டா நாட்டிற்கு அனுப்பினான். அவனையும் வழக்கம் போல் ஸ்பார்ட்டா மக்கள் வரவேற்றனர். அத்தூதன் அம்மக்கள் முன்னிலையில் தான் கொண்டு வந்திருந்த காலிச் சாக்கு மூட்டைகளை அவிழ்த்தான், அதற்குள் கையை விட்டுத்துழாவி ஒன்றுமில்லை என்று உணர்த்தினான், பிறகு ஒன்றும்போசாமல் கன்னத்தில் கைவைத்துச் சோகமாக அமர்ந்துவிட்டான்.

இதைக் கண்டு பெரியவர் ஒருவர் எழுந்தார். "நம்பக்கத்து நாடு பஞ்சத்தால் வாடுகிறது. உதவி செய்ய வேண்டியதுநம்கடமை," என்றார். சிறிது நேரத்தில் பல வண்டிகளில் உணவு தானியங்கள் ஏற்றப்பட்டன. அவற்றைப் பெற்றுக் கொண்ட தூதன் மகிழ்ச்சியுடன் விடை பெறுவதற்காக வந்தான். அவனிடம் அந்தப் பெரியவர் நீ காலிச்சாக்கைக் கொண்டு வந்தாய், அதைப் பார்த்த உடனே உங்கள் நாடு பஞ்சத்தால் வாடுகிறது என்பதை நாங்கள் புரிந்து கொண்டோம், பிறகு ஏன் அதற்குள் கையைவிட்டு ஒன்றும்இல்லை என்று காட்டினாய், நீ தேவைக்கு அதிகமாகப் பேசுகிறாய், உன்பேச்சைக் குறைத்துக் கொள். இருந்தாலும் முதல் தூதனைவிட நீபரவாயில்லை என்று சொல்லி அனுப்பிவைத்தார்.

பேராசிரியர் எ. சோதி,

# நெடுந்தீவில் உணவுக் களஞ்சியம்

# 40 இலட்சம் ரூபா நிதி ஒதுக்கீடு

(யாழ்ப்பாணம்)

வடபகுதியின் அபிவிருத்திக்கென வடக்கு புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சினால் ஒதுக்கப்பட்டுள்ள ஆயிரம் மில்லியன் ரூபா நிதியில் இருந்து நடப்பாண்டு மேற்கொளளப்படவுள்ள அபிவிருத்தி புனரமைப்பு நடவடிக்கைகள் மற்றும் அவற்றிற்கென ஒதுக்கப்பட்ட நிதி விபரங்கள் தெரியவந்துள்ளன.

இதன் பிரகாரம், நெடுந்தீவில் அமையவுள்ள இரண்டாயிரம் மெற்றிக் தொன் கொள்ளளவு உடைய உணவுக் களஞ்சியம் 40 இலட்சம் ரூபா.

அனலை தீவில் அமையவுள்ள ஆயிரம் மெற்றிக் தொன் கொள்ளளவுடைய உணவுக் களஞ்சிய 30 இலட்ச ரூபா,

நெடுந்தீவில் அமையவுள்ள வாடிவீடு 20 இலட்ச ரூபா,

ஊர்காவற்றுறையில் அமையவுள்ள வாடி வீடு 25 இலட்ச ரூபா,

பொதுச்சந்தை 45 இலட்ச ரூபா,

பருத்தித்துறையில் அமையவுாள உணவுக் களஞ்சியம் 10 இலட்ச ரூபா நிதி ஒதுக்கிடப்பட்டுள்ளது.

ஒட்டி சுட்டான் ஓட்டுத் தொழிற்சாலைப் புனரமைப்பிற்கு 80 இலட்சம் ரூபா.

யாழ் மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி சபையின் கேட்போர் கூடத்திற்கு 20 இலட்சம் ரூபா.

தீவுப் பகுதிக்கு ஓர் படகு கொள்வனவு 200 இலட்சம ரூபா.

அனலைதீவிற்கு ஓர் படகு கொள்வனவு 15 இலட்சம் ரூபா;

எழுவைதீவில் அமைக்கப்படவுள்ள அரச உத்தியோகத்தர் சுற்றுலா விடுதி 20 இலட்சம் ரூபா.

அனலை தீவில் அமையவுள்ள அரச சுற்றுலா விடுதி 20 இலட்சம் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது

ஆலயப் புனரமைப்புக்கள் வரிசையில், மாவிட்டபுரக்கந்தசாமி கோயில் 40 இலட்சம் ரூபா.

யாழ். நாகவிகாரை 20 இலட்சம் ரூபா.

கீரிமலை நகுலேஸ்வரர் ஆலயம்-40 லட்சம்ரூபா.

செல்வச்சந்நிதி முருகன்- 20 இலட்சம் ரூபா

வண்ணை சிவன்-20 இலட்சம் ரூபா

வட்டு விஸ்வநாத சமேத சிவன் தேவஸ்தானம்- 40 இலட்சம் ரூபா.

கோட்டை முனியப்பர் ஆலயம்- 10 இலட்சம் ரூபா

கொட்டகை கண்ணகை அம்மன்-10 இலட்சம் ரூபா.

சின்னமடு மாதா கோயில்- 30 இலட்சம் ரூபா.

நாரந்தனை செல் அன்ரனீஸ் தேவாலயம்- 10 இலட்சம் ரூபா;

அனலைதீவு ஐயனார் கோயில்- 25 இலட்சம் ரூபா.

நெடுந்தீவு முருகன் கோயில் 20 இலட்சம் ரூபா

நெடுந்தீவு ஐயனார் கோவில் 15 இலட்சம ரூபா செலவிலும் புனரமைக்கப்படவுள்ளது.

அத்துடன் ஊர்காவற்றுறைத் துறைமுகத்தில் யாத்திரிகள் விடுதி அமைப்பதற்கு 35 இலட்சம் ரூபாவும் யாழ்ப்பாணத்தில் பிரேத அறை அமைப்பதற்கு 100 இலட்சம் ரூபாவும் ஒதுக்கப்பட்டுள்ளதாக தெரியவித்துள்ளது.

(உ-2-6)

## மாதாந்தக் கூட்டம்

(தென்மராட்சி)

வட இலங்கைப் பத்திரிகையாளர் சங்கத்தின் மாதாந்தக் கூட்டம் நாளை ஞாயிற்றுக்கிழமை கொட்டடியிலுள்ள பணிமனையில் மு.ப 10.30 மணிக்கு தலைவர் எஸ். கதிர்காமத்தம்பி தலைமையில் நடைபெறவுள்ளது.

(உ-77)

## 2001 ஆம் ஆண்டிற்கான செயற்திட்டங்கள்

(யாழ்ப்பாணம்)

இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் 2001 ஆம் ஆண்டுக்கான செயற் திட்டங்கள் குறித்து கடந்தவாரம் கொழும்பில் இருந்து யாழ் வந்த சர்வதேச செஞ்சிலுவைச் சங்க இணைப்பாளரால் ஆராயப் பட்டது.

(உ-6)

## மட்டக்களப்பு புறப்பட்டனர்

(யாழ்ப்பாணம்)

யாழ். சிறைச்சாலையில் கடந்த 3 மாதங்களாக தற்காலிகமாக கடமையாற்றி வந்த மட்டக்களப்பு சிறைச்சாலை உத்தியோகத்தர்கள் நால்வர், தமது கடமையை முடித்து கடந்த செவ்வாய்க்கிழமை கப்பல் மூலம் மட்டக்களப்பு புறப்பட்டுச் சென்றுள்ளனர்.

(உ-6)

## கைதிகள் இருவர் வவுனியாவுக்கு

(யாழ்ப்பாணம்)

பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு யாழ்.சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த கைதிகள் இருவர் சிறைச்சாலை உத்தியோகத்தர்களால் கடந்த செவ்வாயன்று வவுனியா அழைத்துச் செல்லப்பட்டுள்ளனர்.

கணபதி ஜெகன், கனகசபை குலேந்திரன் ஆகிய இருவருமே வவுனியா உயர் நீதிமன்றில் வழக்கு தொடர்பாக ஆஜர் செய்யப்படும் வகையிலேயே அழைத்துச் செல்லப்பட்டுள்ளனர்.

(உ-6)

## இலவச மருத்துவ முகாம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் ஊடகவியலாளர் சங்கத்தின் ஏற்பாட்டில் இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தினால் எதிர்வரும் 8 ஆம் திகதி இலவச மருத்துவ முகாம் ஒன்று பருத்தித்துறைத் தும்பளைப் பகுதியில் நடத்தப்படவுள்ளது.

இம் முகாமில் சிறுநீர், இரத்த அழுத்தம் போன்றன பரிசோதிக்கப்படவுள்ளதாகவும் பொதுமக்களைப் பங்குபற்றி பயனடையுமாறும் ஊடகவியலாளர் சங்கத்தலைவர் எஸ். தவச்செல்வன் கேட்டுள்ளார்.

(உ-2,6)

## ஆசியாவில் மிகப் பெரிய தேயிலைக் களஞ்சியசாலை

(கொழும்பு)

ஆசியாவிலேயே மிகப் பெரிய தேயிலைக் களஞ்சியசாலை ஒன்று முத்துராஜவலயில் இருபது கோடி ரூபாசெலவில் அமைக்கப்பட்டு வருகின்றது.

ஐம்பது லட்சம் கிலோகிராம் தேயிலை ஒரே தடவையில் களஞ்சியப் படுத்தக்கூடிய வசதிகள் இங்கு ஏற்படுத்தப்படவுள்ளன.

அத்துடன் சர்வதேசரீதியில் தேயிலைத் தொழிலை விருத்தி செய்யும் முகமாக, இத் தொழிற்சாலை கணனிமயப்படுத்தப்படவுள்ளது.

(செ)

## மாவனல்ல நிலவரம் வழமைக்குத் திரும்புகிறது

(மாவனல்ல)

மாவனல்ல நகரில் இடம்பெற்ற சிங்கள – முஸ்லிம் இனக்கலவரத்தின் போது ஏற்பட்ட சேத விபரங்கள் உடன் அறியத்தருமாறு அமைச்சர் அதாவுட செனிவிரத்தினா பாதிக்கப்பட்ட மக்களைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

மாவனல்லகலவரம்தொடர்பாக நேற்று கூட்டமொன்று நடைபெற்றது. இக் கூட்டத்தில் அப் பிரதேசத்தின் மதத்தலைவர்கள் முன்னணி அரசியல் தலைவர்கள் அரச உத்தியோகத்தர்கள் கலந்துகொண்டனர்.

மாவனல்லநகரில் தற்போது அமைதிநிலவுவதாகவும், ஊரடங்கு சட்டம் மீண்டும் இன்று மாலை அமுல்படுத்தப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப் படுகிறது;

(வ)

## யாழ். சிறைச்சாலைக்கு மேலும் ஒரு வாகனம்

### இங்கு எடுத்து வருவதில் தாமதம்

(யாழ்ப்பாணம்)

யாழ் சிறைச்சாலையின் தேவைகளுக்கென நீதிச் சேவை ஆணைக் குழுவினால் வாகனம் ஒன்று வழங்கப்பட்டுள்ளது:

மேற்படி சிறைச்சாலையில் ஒரே ஒரு வாகனம் மாத்திரமே இதுவரை பயன்படுத்தப்பட்டு வந்தமையினால், சிறைச்சாலைப் பணிகளை ஆற்றுவதில் நிலவி வந்த இடைஞ்சல்களைப் போக்கும் வகையில், சிறைச்சாலை அத்தியட்சகர் எஸ். சிவசுந்தரத்தின் வேண்டுகோளின் பிரகாரம் இவ் வாகனம் வழங்கப்பட்டுள்ளது.

இதேவேளை, நீதிச்சேவை ஆணைக் குழுவினால் வழங்கப்பட்ட வாகனத்தை கொழும்பில் இருந்து இங்கு கப்பல் மூலம் எடுத்து வருவதில் அசமந்தப் போக்கு கடைப் பிடிக்கப்படுவதாகவும் சிறைச்சாலை வட்டாரங்கள் சுட்டிக் காட்டியுள்ளன;

(உ-6)

## காணாமற் போனவரின் புகைப்படத்தை ஒப்படைக்கக் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

யா/மாவட்டத்தில் காணாமற் போனோர் தொடர்பான விசாரணைகளை மேற்கொண்டுவரும் விசேட புலனாய்வுப் பிரிவினர், காணாமற் போனோரின் புகைப் படத்துடன் விசாரணைகளுக்குச் சமுகமளிக்குமாறு உறவினர்களுக்கு அறிவித்துள்ளனர்.

காணாமற் போனவர்களின் உறவினர்கள் உரிய இடத்தில் இல்லாது விசாரணைக்குச் சமுகமளிக்க தவறும் பட்சத்தில், சம்பந்தப்பட்ட பகுதி கிராம அலுவலர் அவர்கள் இருக்கும் இடம் பற்றிய விபரங்களை பொலிஸ் நிலையத்தில் அறியத்தர வேண்டும் எனவும் புலனாய்வுப் பிரிவினர் அறிவித்துள்ளனர்.

(உ-10)

## திருடிவரும் பொருட்களை வாங்குவதில் மக்கள் போட்டாபோட்டி

(தென்மராட்சி)

தென்மராட்சியிலுள்ள மட்டுவில், நுணாவில், கைதடி பகுதிகளுக்குத் திருடர்கள் சென்று பொதுமக்களின் பொருட்களை தொடர்ந்தும் சூறையாடி வருவதாகத் தெரியவருகின்றது.

நீர்வேலி தரவையூடாகச் செல்லும் இவர்கள அங்கிருந்து கொண்டுவரும் பொருட்களை மிகவும் மலிவு விலையில் விற்பனை செய்கின்றனர்.

இதேவேளை, திருடிவரும் பொருட்களைக் கொள்வனவு செய்வதிலும் பொது மக்கள் மத்தியில் போட்டா போட்டி காணப்படுவதாகவும் கூறப் படுகிறது.

(உ-77)

## மலையக இளைஞர் மீது விசாரணை துரிதப்படுத்தக் கோரிக்கை

(கொழும்பு)

ஹற்றன் பொலிஸாரால் 1998 ஆம் ஆண்டு கைது செய்யப்பட்டு களுத்துறைச் சிறையில் தடுத்து வைக்கப் பட்டுள்ள மலையக இளைஞர்கள் மீதான விசாரணைகளை துரிதப்படுத்தக் கோரி அமைச்சர் ஆறுமுகம் தொண்டமான் சட்டமா அதிபருக்கு கடிதம் ஒன்றை அனுப்பிவைத்துள்ளார்.

அப்பாவி மலையக இளைஞர்கள் பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு சிறைகளில் தடுத்து வைக்கப்பட்டிருப்பது மிகவும் பரிதாபகரமானது எனவும் அக்கடிதத்தில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளமை குறிப்பிடத் தக்கது.

(உ-4)

# உரிமைக்காக பாடுபடுபவர்களுக்கு பயங்கரவாதிகள் பட்டமா?

## அமெரிக்கா மீது ஈராக் சாடல்

(தெஹ்ரான்)

பயங்கரவாதி என எவரையும் கூறும் உரிமை அமெரிக்காவிற்கு இல்லையென்று ஈரான் காட்டமாக கருத்து வெளியிட்டுள்ளது.

தமது உரிமைகளை வென்றெடுக்கப் பாடுபடுபவர்களையே அமெரிக்கா பயங்கரவாதிகள் என்று வர்ணிக்கிறது எனவும்,

பயங்கரவாதம் என்ற கருத்தோட்டம் தொடர்பான அமெரிக்காவின் வரைவிலக்கணத்தை சர்வதேச சமூகம் ஏற்றுக்கொள்ளவில்லை.

எனவே சர்வதேச விவகாரத்தில் தனது நடத்தையை அமெரிக்கா மறுசீரமைத்துக் கொள்ள வேண்டும் எனவும் ஈரான் அமெரிக்காவிற்கு ஆலோசனை வழங்கியுள்ளது.

ஈரான் பயங்கரவாத நடவடிக்கைகளுக்கு ஆதரவு அளித்து வருகிறது என்ற அமெரிக்காவின் குற்றச்சாட்டை மறுத்துரைத்த போதே ஈரான் வெளிவிவகார அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

(உ-9)

## சாதனைகளை பாராட்டி சச்சினுக்கு விருது

(புதுடில்லி)

கிரிக்செட் உலகில் இந்திய அணித் தலைவர் சச்சின் டெண்டுல்கர் நிகழ்த்திய சாதனைகளுக்காக ''மகாராஷ்டிர பூஷான்'' என்ற விருது இவருக்கு வழங்கப்பட்டுள்ளது.

கடந்தகால கிரிக்கெட் வரலாற்றில் இந்தியாவிற்காக சச்சின் பாடுபட்டமைக்காகவும் அவர் நிகழ்த்திய சாதனைகளுக்காகவும் மேற்படி விருது வழங்கப்பட்டுள்ளது.

இந்த விருதை மகாராஷ்டிர முதல்வர் சகான புஹிபால் சச்சினுக்கு வழங்கினார். (உ-9)

## இந்திய மீனவர் 150 பேர் விடுவிப்பு

(கராச்சி)

பாகிஸ்தானைச் சேர்ந்த 150 மீனவர்களை இந்தியா விடுதலை செய்ததை யடுத்து பாகிஸ்தான் சிறையில் உள்ள 150 இந்திய மீனவர்களை பாகிஸ்தான் விடுதலை செய்துள்ளது.

இந்த மீனவர் விடுதலை செய்யப்படும் நிகழ்வு நேற்று முன்தினம் இடம்பெற்றுள்ளது.

விடுவிக்கப்பட்ட இந்திய மீனவர்களை அழைத்துவர இந்திய மீனவர்சங்கம் மற்றும் அரச பிரதிநிதிகள் அடங்கிய குழு ஒன்று கராச்சி சென்றுள்ளது. (உ-9)

### முக்கிய விடயங்கள் பற்றி பேச

## ரஷ்யவெளியுறவு அமைச்சர் இந்தியா விஜயம்

(புதுடில்லி)

ரஷ்யாவின் வெளி விவகார அமைச்சர் இகுட் இவனா இந்திய அரசுடன் பேச்சுவார்த்தை நடாத்த புதுடில்லி வந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தியாவில் நடைபெறவிருக்கும் பேச்சு வார்த்தைகளில் அமெரிக்க அதிபர் ''புஷ்'' இன் தேசிய ஏவுகணைப் பாதுகாப்புத் திட்டம் குறித்து முக்கியமாக ஆராயப்படும்.

அமெரிக்க அரசின் ஆதிக்கத்தை சமாளிக்க இந்த இரு அரசுகளும் உறவு ஏற்படுத்தும் முகமாக இவ் விஜயம் அமைந்துள்ளது என அரசியல் நோக்கர்கள் கருத்துவெளியிட்டுள்ளனர். (உ-9)

## அ. தி. மு.க கூட்டணிக்கு வெற்றி வாய்ப்பு

### மூப்பனார் நம்பிக்கை

(சென்னை)

எதிர் வரும் தமிழக சட்டசபைத் தேர்தலில் அ.இ.அ.தி.மு.க கூட்டணியே வெற்றி பெறும் என த.மா.கா தலைவர் மூப்பனார் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

சுகவீனம் காரணமாக வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வீடு திரும்பியுள்ள நிலையில் நிருபர்களுடனான சந்திப்பில் இவ்வாறு மூப்பனார் தெரிவித்தார்.

அவர் இது தொடர்பாக மேலும் கூறியதாவது எதிர் வரும் தேர்தலில் அ.இ.அ.தி.மு.க கூட்டணியே ஆட்சி அமைக்கும்.

அமையப்போகும் அப் புதிய ஆட்சி நல்லாட்சியாக அமையும் என்ற நம்பிக்கையிலேயே த.மா.கா தொடர்நதும் அக் கூட்டணியில் இடம் பெற்றுள்ளது எனக் கூறியுள்ளார்.

இதே வேளை, மூப்பனார் இது வரை எந்தவொரு தேர்தல் பிரசார நடவடிக்கையிலும் ஈடுபடவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது. (உ-9)

## சீனாவை அமெரிக்கா நேரடியாக எதிர்க்கும்

### நோக்கர்கள் கருத்து

(வாஷிங்டன்)

அமெரிக்காவின் புதிய ஆயுதக் கொள்கையை கடுமையாக சீனா விமர்சித்ததையடுத்து சீன-அமெரிக்க உறவு மேலும் விரிசல் கண்டுள்ளதாக அரசியல் அவதானிகள் தெரிவித்துள்ளனர்.

அமெரிக்க-சீன விமான விபத்தினையடுத்து மேற்படி விரிசல் மேலும் மேலும் அதிகரித்து வருகிறது.

தாய்வானுக்கு உதவிகளை வழங்குவதன் மூலம் சீனாவுக்கு எதிராக மறைமுகமாகச் செயற்பட்டுக் கொண்டிருக்கும் அமெரிக்கா இனி நேரடியாகவே சீனாவை எதிர்க்கக் கூடும் எனவும் நோக்கர்கள் கருத்துத் தெரிவித்துள்ளனர். (உ-9)

## உலக தரிசனம்

## பயனீர் - 10 விண்கலம் மீண்டும் செயல்படுகிறது

(லண்டன்)

பூமியில் இருந்து 7 மில்லியன மைல் தொலைவில் உள்ள பயனீர் -10 விண் வெளிக்கலம் 8 மாத காலத்திற்குப் பின்னர் பூமிக்குச் செய்தி அனுப்பியுள்ளதாக நாஸா தெரிவித்துள்ளது.

ஆளற்ற இப் பயனீர் விண்கலம் கடந்த 8 மாத காலமாக பூமியுடன் எவ்வித தொடர்புமற்றுக் காணப்பட்டது.

அதன் பின்னர் விஞ்ஞானிகள் மேற்கொண்ட கடுமையான முயற்சிகளுக்குப் பின்னர் தற்போது பயனீர் விண்வெளிக் கப்பலில் இருந்து பூமிக்குத் தகவல் வந்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (உ-9)

### வடகொரிய அதிபரின்

## மகன் கைது

(ரோக்கியோ)

வடகொரிய அதிபர் கிங் ஜொங்கின் மூத்த மகன் ஜப்பானுக்குள் சட்டவிரோதமாக நுழைய முற்பட்ட போது, பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

மேற்படி நபர் போலி கடவுச்சீட்டு மற்றும் ஆவணங்களுடன் ரோக்கியோவின் விமான நிலையம் ஒன்றில் வைத்துப்பிடிக்கப்பட்டார் என்று ஜப்பானில் உள்ள செய்தி நிறுவனம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

கைது செய்யப்பட்ட பின்னர் மேற்கொள்ளப் பட்ட விசாரணைகளை அடுத்து மேற்படி நபர் தான் வடகொரிய அதிபரின் மூத்த மகன் என்று இனம் காட்டிக் கொண்டார்.

இதேவேளை ஜப்பானுக்கும் வடகொரியாவுக்கும் இடையில் எந்தவிதமான இராஜதந்திர உறவும் இல்லை என்பது குறிப்பிடத்தக்கது. (உ-9)

## வாக்கு வேட்டைக்கு போட்டா போட்டிகள்

### தேர்தல்களம் சூடுபிடித்துள்ளது

தமிழகத்தின் சட்டசபைத் தேர்தலுக்கு இன்னும் ஐந்தே நாட்கள் உள்ள நிலையில் தேர்தல் பிரச்சாரங்கள் சூடுபிடிக்கத் தொடங்கி விட்டது அரசியல் கட்சிகளின் அனல் பறக்கும் தேர்தல் அறிக்கைகளில் எதை நம்புவது எதை விடுவது என்ற குழப்பத்தில் தமிழக மக்களின் நிலை மிகப் பரிதாபமாக இருக்கிறது.

அந்தளவிற்கு கட்சிகள் வெளியிட்டுக் கொண்டிருக்கும் அறிக்கைகளில் வாக்குறுதிகளுக்குப் பஞ்சமே இல்லை. எந்த நாட்டுக் கவிஞர்களை விடவும் தமிழக அரசியல் வாதிகளுக்கு கற்பனை ரொம்ப ஜாஸ்த்தி தான் என்று தமிழக மக்கள் பேசிக் கொள்வது காதில் விழுகிறது.

இந்த நிலையில் கலைஞர் மு. கருணாநிதி தி.மு.க. தலைமையிலான கூட்டணிக்கும் செல்வி ஜெயலலிதா அ.இ.அ.தி.மு.க கூட்டணிக்கும் தலைமை தாங்கி தமிழ் நாடு முழுவதும் சூறாவளிப் பயணம் மேற்கொண்டு பிரச்சாரத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

கருணாநிதியின் அரசியல் வாரிசு ஸ்ராலின் விடுதலைச் சிறுத்தைகள் அணித்தலைவர் திருமாவளவன் நடிகர் நெப்போலியன் நடிகை ராதிகா, மக்கள் தமிழ் தேசக் கட்சி நிறுவுனர் கண்ணப்பன் மற்றும் பாரதிய ஜனதாக் கட்சி ஜனாகிருஸ்ணமூர்த்தி உட்பட மேலும் சில பிரமுகர்களையும் கூட்டுச் சேர்த்துக் கொண்டு கலைஞரின் வாக்கு வேட்டை கோலாகலமாகத் தொடர்ந்து கொண்டிருக்கும் அதேவேளை அ.இ.அ.தி.மு.க பக்கம்பார்வையைத் திருப்பினால் அங்கே ஜெயலலிதா பிரச்சாரத்திற்காக ஒரு பெரும் படையையே வைத்திருக்கிறார் என்று தான் கூற வேண்டும்.

பா.ம.க.த.மா.கா காங்கிரஸ் உட்பட ஏனைய கூட்டணிக் கட்சிகளின் பிரமுகர்களையும் ராதா, அம்பிகா போன்ற நடிகர் நடிகை கூட்டத்தினையும் கூட்டுச் சேர்த்துக் கொண்டு ஜெயலலிதாவின் தேர்தல் பிரச்சாரம் வீச்சுடன் இடம் பெறுகின்றது.

ஊழல் குற்றச் சாட்டுக்களால் தனது வேட்பு மனு ஏற்றுக் கொள்ளப் படாமல் போகுமோ என்று இரண்டு தொகுதிகளில் வேட்பு மனுக்களைத் தாக்கல் செய்த போதும் இரண்டு தொகுதிகளிலேயும் அவரது வேட்பு மனுகள் நிராகரிக்கப்பட்டது.

இது தொடர்பாக முன்னாள் த.மா.க தலைவர் ப. சிதம்பரம் கருத்துத் தெரிவிக்கும் போது ஜெயலலிதாவிடம் ஹெலிகொப்டர் இருந்தால் அவர் 234 தொகுகளிலும் வேட்பு மனுத்தாக்கல் செய்திருப்பார் என்று காஷ்யமாக சொன்னது ரசிக்கத் தக்கது தான்.

ஆனால் என்னதான் ஜெயலலிதாவின் வேட்பு மனு ஏற்றுக் கொள்ளப் படாமல் போனாலும் அவரது பிரச்சார வேகம் குறையவே இல்லை பிரச்சாரக் கூட்டங்களில் தான் தான் அடுத்த முதலமைச்சர் என்று முஸ்டி உயர்த்திப் பேசும் துணிவைப் பார்க்கும் போது கலைஞருக்கு கூட கலக்கம் வருவதாக அவரது கட்சிக்குள்ளேயே பேசிக் கொள்கிறார்கள்.

### தேர்தல்களத்தில்

## திருபுத்திரன்

இதே சமயம் இரு கூட்டணிகளுமே குப்பைத் தொட்டில்கள்தான். நீதியான, நியாயமான ஆட்சியை அவர்களால் ஒரு போதுமே வழங்க முடியாது என முன்பு ''முதல்வர்'' புகழ்பாடித்திரிந்தவை. கோபாலசாமி மக்களின் வாக்குகளை ம.தி.மு.கவுக்கு வழங்குமாறு வேண்டுகோள் விடுத்து தனது பிரச்சார ஊர்தியை வேறொரு பக்கமாக நகர்த்திச் செல்கிறார்.

இது இவ்வாறிருக்க, வழமை போலவே தமிழக வீதிகள், அவர்கள், சந்திகள் தோறும் கட்அவுட்களும், சுவரொட்டிகளும் சுலோகங்களும ஆக்கிரமித்துள்ளன.

ஆனால் வழமைக்கு மாறாக தமிழ் நாட்டில் இம்முறை அமுல்ப்படுத்தப்பட்டு வரும் தேர்தல் சட்டவிதி முறையில் அவை அனைத்துமே ஒருபக்கத்தால் அகற்றப்பட்டுக் கொண்டிருப்பதாக அறியமுடிகிறது.

எனினும் தமிழ் நாட்டு மக்களை பொறுத்தவரை யார்தான் வந்தாலும் தமக்கு என்னதான் ஆகப்போகிறது என்று எண்ணி அரசியல்வாதிகள் வெளியிடும் மத்தாப்பு வாக்குறுதிகள் குறித்து முன்னைய முறைகள் போல் கலர் காலகர கனவு கண்டு கொண்டு வாக்களிக்கப் போகும் நிலையில் இருந்து கொஞ்சம் விடுபட்டுள்ளதாகவே தெரிகிறது.

### பாரதீயஜனதா க்கட்சி

## முஸ்லிம்களின் எதிரியல்ல

(புதுடில்லி)

பாரதிய ஜனதாக்கட்சி முஸ்லிம்களின் எதிரியல்ல என்று தேர்தல் பிரச்சாரத்தில் உரையாற்றிய உள்துறை அமைச்சர் அத்வானி தெரிவித்துள்ளார்.

பாரதிய ஜனதாக்கட்சி முஸ்லிம்களுக்கு விரோதமான கட்சி எனவும் மதவாதக் கட்சி எனவும் காங்கிரஸ் குற்றம் சாட்டிவருவதை நாம் வன்மையாகக் கண்டிக்கின்றோம்.

இந்தியாவில் சட்டவிரோதமாக குடியேறுபவர்களையும் முஸ்லிம் தீவிரவாதிகளையுமே நாம் எதிர்க்கிறோமே தவிர முஸ்லிம் மக்களை ஒருபோதும் எதிரியாகப் பார்ப்பதில்லையென அத்வானி மேலும் தெரிவித்துள்ளார். (உ-9)

## பொறுப்பற்ற விதமாக இந்திய அரசு நடப்பதாக சோனியா கண்டனம்

(புதுடில்லி)

எதிர்க்கட்சிகளைக் கலந்தாலோசிக்காமல் இந்திய அரசு அமெரிக்காவின் புதிய அணுவாயுத மற்றும் ஏவுகணைத் தற்காப்புக் கொள்கைகளுக்கு எவ்வாறு ஆதரவளிக்க முன்வந்ததென்று காங்கிரஸ் கட்சித் தலைவி சோனியா கேள்வி எழுப்பியுள்ளார்.

அத்துடன் இந்திய அரசின் இப் பொறுப்பற்ற செயல் குறித்து பிரதமர் விளக்கம் தர வேண்டும் எனவும் அவர் மேலும் வலியுறுத்தியுள்ளார்.

இதேவேளை, காங்கிரஸ் கட்சித் தலைவி சோனியாவின் மேற்படி கண்டனத்தை இந்திய பிரதமர் வாஜ்பாய் மறுத்துள்ளார்.

(உ-9)

இறை கடியன் என்றுரைக்கும் இனாச்சொல் வேந்தன் உறைகடுகி ஒல்லைக் கெடுக்-கும்;

- குறள்

# வலம்புரி

## எழுதாத திருமணம்

அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையே சுமுகமான பேச்சுவார்த்தை நடைபெறவேண்டுமாயின் யுத்த நிறுத்தம்- புலிகள் மீதான தடைநீக்கம்ஆகிய இருநிபந்தனைகளும்நிறைவேற்றப்படவேண்டும்

இஃது விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகளால் நோர்வேயிச் தூதுவர் ஜோன் வெஸ்பேர்க் மூலம் அரசுக்கு அறிவிக்கப்பட்ட செய்தியாகும்.

நாட்டில்சமாதானப் பேச்சுவார்த்தைக்குப் புலிகள் முன் வர வேண்டுமாயின் அது யுத்தம் நடந்து கொண்டிருக்கும் வரை சாத்தியப்படா தென்பது புலிகள் தரப்பு வாதம்.

இந்நிலையில்கடந்ததிங்கட்கிழமை கொழும்பு வந்தநோர்வேயின்விசேட தூதுவர் எரிக்சோல் ஹெய்ம் இரு தடவைகள் ஜனாதிபதி சந்திரிகாவைச் சந்தித்துப் பேச்சு நடத்தியுள்ளார்.

இரண்டாவது தடவையாக நடைபெற்ற பேச்சுவார்த்தையின்போது உத்தியோகப் பற்றற்ற யுத்த நிறுத்தத்திற்கு அரசு தயார் என்பதுபோல் ஜனாதிபதியால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

விடுதலைப் புலிகள் ஒருதலைப் பட்சமான யுத்த நிறுத்தத்தை மேற்கொண்டிருந்தபோதாவது அரசாங்கம் உத்தியோகப் பற்றற்றயுத்தநிறுத்தத்தை அறிவித்திருந்தால், விரும்பியோ விரும்பாமலோ விடுதலைப் புலிகளும் தமது தரப்பு யுத்த நிறுத்தத்தை நீடித்திருப்பர்.

ஆனால் அரசுநான்கு மாதம் காத்திருந்த நல்லதொரு சந்தர்ப்பத்தைத் தவறவிட்ட நிலையில், இப்போது இந்தியா உள்ளிட்டசர்வதேசநாடுகளின் அழுத்தங்களினால் வேண்டாவெறுப்பாகத் தலையாட்டுவது போல் உத்தியோகப் பற்றற்ற யுத்த நிறுத்தம் பற்றிஎரிக்சோலிடம் தெரிவித்துள்ளது.

இனப் பிரச்சினைக்குத் தீர்வு காண சமாதானப் பேச்சுவார்த்தையில் பங்கு பற்ற வேண்டிய இரு தரப்பில் ஒரு பகுதியினர் சட்டரீதியாகயுத்தம் செய்யப்பட வேண்டுமெனக் கோரி நிற்க, மறுதரப்புகல்யாண எழுத்தில்லாமல் திருமண வைபவத்தை நடத்தலாமென்பது போல் உத்தியோகப் பற்றற்ற யுத்த நிறுத்தத்தைஅறிவித்திருப்பது எரிக்சோலின் சமாதான முயற்சிக்கு ஆரோக்கியமாகஅமையுமாஎன்பது கேள்விக் குறியே.

# காலத்தின் தேவைக் கேற்ப கலைவளர்க்கும்
# திருமறைக் கலாமன்ற தமிழ்விழா சிறப்புறுக

**ஆ. ஜென்சன் றொனால்ட்**

மதங்களின் வேறுபாடுகள் களைந்து கலைகளின் சங்கமமாய் தமிழ் வளர்க்கும் திருமறைக் கலாமன்றத்தின் மாபெரும் தமிழ்விழா இன்று ஆரம்பமாகின்றது. தொடர்ந்து ஒன்பதுநாட்கள் நடைபெறவுள்ள இத்தமிழ் விழா யாழ்ப்பாணத்தில் தமிழுக்கு முடி சூட்டுவதாக அமைந்துள்ளது.

### குறிக்கோள்

'கலை வழி இறைபணி' எனும் உன்னதமான குறிக்கோளுடன்யாழ்ப்பாணத்தில் காலூன்றிநின்றுஇறைவனின் உன்னத செயற்பாடுகளை கலைகளினூடாக காட்சிப்படுத்தி வரும் திருமறைக்கலா மன்றமும் அதன் அர்ப்பணிப்பாளர்கள், கலைஞர்கள், வழிகாட்டிகள் அனைவரும்போற்றுதற்குரியவர்களே.

### வேற்றுமையின்மை

மதப் பிரிவினைகளை மறந்து, இறைவனால்படைக்கப்பட்ட நாமனைவரும் ஒரே இனம் என்ற உன்னத பார்வையில் தமிழர் கலாசாரத்தைக்காத்து யாழ். மண்ணில் கலைப் பொக்கிஷமாக திருமறைக் கலாமன்றம் அமைந்திருக்கின்றது.

ஒவ்வொரு நிகழ்வுகளிலும் எமது கலாசாரத்தின் மண் வாசனை கமழும் வகையில் தனது கலைப்பணியைப் புரிந்து வருகின்றது.

இங்கே கிறிஸ்தவர்கள், இந்துக்கள் என்ற எந்த வேற்றுமையுமின்றி தம்மை கலை வாழ்வில்இணைத்துஉன்னதப் பணிபுரியும் எம் தமிழ் நெஞ்சங்களும் அவர்களுக்குஅன்பும் ஆதரவும் ஊட்டிவரும் யாழ். சமூக மக்கள் பெருந்தகைகளும் பாராட்டப்பட வேண்டியவர்கள்.

### முத்தமிழ் முழக்கம்

தமிழ்என்றால்இயல், இசை நாடகம் ஆகிய மூன்றும் இணைந்து முத்தமிழாய் முழங்குகின்றன. நாட்டுக் கூத்துக்களும், பட்டி மன்றங்களும், பாடுகளின்காட்சியும், கவியரங்குகளும், நாட்டிய ஏற்றங்களும் இன்னிசை கானங்களுமாக, கலை வழி இறைபணி செய்துமுத்தமிழ்வளர்க்கும் தமிழ்ச் சங்கமாய் யாழ். நகரில் திருமறைக் கலாமன்றம் துலங்குகின்ற தென்றால் மிகையில்லை.

### சர்வதேச தரம்

சர்வதேசரீதியில் கலைகளின் தரத்தை எட்டிப்பிடித்து உலகநாடுகளுக்கு தமது கலைஞர்கள் மூலம் சுற்றுப்பயணங்களை மேற்கொண்டு தமிழ் வளர்த்து சர்வதேச ரீதியில் புகழ் பெற்று நிற்கின்றது திருமறைக் கலாமன்றம்.

### சேவை நோக்கு

இலாபநோக்கற்று மனித விழுமியங்களை கலாசாரம் எனும் பாதை பிறழ்வுபடாது அடைய வழி சமைத்துக் கொண்டிருக்கும் வழிகாட்டியாக இம் மன்றம் விளங்குகின்றது.

இதைவிட கலை ஆர்வலர்களுக்கு குறைந்த கட்டணத்துடன் கலை பயிற்றுவித்துநல் விற்பன்னர்களை மண்ணில் தோற்றுவித்துக் கொண்டிருக்கும் திருமறைக் கலாமன்றத்தின் சேவை என்றும் பாராட்டுதற்குரியதே.

### தமிழ் விழா -2001

வருடந்தோறும் தமிழ் விழாவை கொண்டாடிவரும் கலாமன்றம் இம்முறை கொண்டாடுகின்ற தமிழ் விழா காலத்தின் சிறப்புப்பதிவாக அமைகிறது

அதாவது இலங்கையில் பல்வேறு பிரதேசங்களிலுள்ள திருமறைக்கலாமன்ற கலைஞர்களை ஒரே மேடையில்சந்திக்க வைத்து சிந்திக்கத்தக்க வகையில் முதன் முதலாக இச்சிறப்புத் தமிழ் விழாவைக் கொண்டாடுகின்றது

நாடகங்கள், நாட்டுக் கூத்துக்கள், இசை நிகழ்ச்சிகள், இசைக்கச்சேரிகள், கவிபரங்குகள், கிராமிய நடனங்கள், நூல் வெளியீடு, ஒலிநாடா வெளியீடு, பல்துறைசார் கருத்தரங்குகள், சொற்பொழிவுகள், பாராட்டுவிழா போன்ற பன்முகப்பட்ட நிகழ்வுகளை தமிழ் எனும் சங்கமத்துள் சமைத்து ஒன்பது நாட்களுக்கு தமிழ்விருந்து படைக்கின்றது.

### ஆர்வலர்களின் பாராட்டு

இவ்வாறு கொழும்பு, திருகோணமலை, ஹப்புத்தளை போன்ற இடங்களிலிருந்து கலைஞர்களை வரவழைத்து தமிழ்மழை பொழியும் திருமறைக் கலாமன்றத்தைதமிழ் கலை ஆர்வலர்கள்மனமாரப் பாராட்டி நிற்கின்றனர்

யாழ் மண்ணில் இத்தகையதொரு தமிழ் விழாவை நடத்தும் யாழ் திருமறைக் கலாமன்றத்தின் பணிசிறந்துதமிழ் வளர்ந்தோங்க நாமும் அவர்களையும் அவர்களது பணியையும் பாராட்டிஊக்கப்படுத்த வேண்டும்.

தொடரட்டும் 'கலைவழி இறைபணி' மலரட்டும் 'மனி தமது மண்ணகத்தில்' மிளிரட்டும் 'தமிழ் மெழி கலைகளில் என மனதார வாழ்த்துவோம்.

# ஈழத்திலும், தமிழகத்திலும் தோன்றி வளர்ந்து
# தலையாய தமிழ்ப் பணியாற்றிய ஆசான்கள்

**செல்வி உமா தங்கவடிவேல்**
தம்பசிட்டி

எத்தொழில்யார்யார் செயினும் அத்தொழிலில் அவர் உயர்ச்சியே கொளினும் அத்தொழில்கள் எல்லாவற்றையும் காட்டிலும் பார்போற்றும் இனியதொரு தொழிலாகக்கொள்ளப்படுவதுஆசிரியத் தொழிலே! தலைசிறந்த எண்ணங்களையும், இலட்சியங்களையும் மாணவர் மத்தியிலே விதைத்து, சிறந்தஇலட்சியவாதிகளையும், நல்லதொரு நாளைய சமூகத்தையும் உருவாக்கக் கூடியவர் ஆசிரியரே அன்புசால் எண்ணமும் சான்றாண்மையும் கொண்டு இன்னுயிர் யாவையும் தன்னுயிராக மதித்துத் தான் பிறந்தநாட்டிற்கும்தன் தாய் மொழிக்கும் அளப்பரிய சேவை செய்த ஆசான்கள், வரலாற்று ஏடுகளிலே தமக்கெனத் தனியான இடத்தை பிடித்துக் கொண்டார்கள். சான்றாண்மையும் கொண்ட ஆசிரியர் பலர் தம்வழியே, தம்மரிய எண்ணங்களின் வழியே பல மாணக்கர்களைஉருவாக்கித்தந்து பெருமை பெற்றவர்களாகிறார்கள். அவ்வரிசையிலேமேலைப்புலோலியூர் சதாவதானி நா. கதிரைவேற்பிள்ளையவர்கள் சிறப்பானவர் தமிழ்தென்றல் வி. கல்யாண சுந்தரனார் தமிழ் பேசும் உலகெலாம் பேசப்படக் காரணமானவர் வி.க.வின்; ஆசான் கதிரைவேலரே!

### தமிழகத்தில் தமிழ் வளர்த்தார்

ஈழத்திலே பிறந்த நா. கதிரைவேற்பிள்ளை தமிழ்ப்பணி செய்வதற்காகத் தமிழகம் நோக்கினார். கதிரைவேலர் அங்கு செய்ததமிழ்ப் பணிகள் பல அவை யாவும்காலத்தால் அழிக்கப்பட முடியாதவை தமிழ்ப் பேரகராதியை, நைடத உரையை, சுப்பிரமணிய பராக்கிரமத்தை, கூர்மபுராண உரையை, திருவாதவூரடிகள் புராண உரையை எழுத்துருவிலேதந்தார். அவ செய்த பணிகள் யாவினும் தலை சிறந்தது. நல்லதொரு தமிழ்த் தொண்டனாக வி.க.வினைஉருவாக்கியமையே. இராயப்பேட்டை வெஸ்லிக் கல்லூரியிலே கதிரவேற்பிள்ளை தமிழாசிரியராக விளங்கிப் பல தமிழ்பற்றுடைய நன்மாணாக்கர்களை உருவாக்கும் வாய்ப்பினைப் பெற்றார். அவர் ஆற்றிய பணிகளைப்பலர் மறைந்தாலும் காலத்தால் மறக்க முடியாதவாறு செய்தவர் வி.க. ஆவார்.

### வி. க. வின் ஆசிரியர்

அருட்பா, மருட்பாவாதம் சூடு பிடித்த காலத்தே, சமய நூல்களைக் கற்பித்து அதனூடே தமிழ் வளர்த்த தம் ஆசானாகிய கதிரைவேலருக்காக அருட்பா மறுப்பிற்காக நீதிமன்றம் சென்று சாட்சி சொன்னார், அவரின் தலைசிறந்த மாணவன்வி.க.இதன் காரணமாக 1904ல் பத்தாம் வகுப்பு (மெட்ரிகுலேசன்) அரசதேர்விற்காகத் தேர்ந்தெடுக்கப்படாத வி.க. அத்துடன் பள்ளிப் படிப்பை முடித்துக் கொண்டார். பள்ளிப்படிப்பை அரைகுறையாக முடித்தபோது அவரின் உயர் கல்விக் கனவுகள் சிதைந்த போதிலும், பிற்காலத்தில் தமிழகத்தின் தனிப் பேராசிரியராக அறிஞர்போற்றும் நூல்களை இயற்றினார். அதுமட்டுமன்றி எழுத்திலும் பேச்சிலும் நிகரற்றவராகத் தமிழுக்கும் தமிழகத்திற்கும் பெருந்தொண்டாற்றமுடிந்ததென்றால் அதற்குக் காரணமானவர் அவர் ஆசான் கதிரவேற்பிள்ளையவர்களே!

### தமிழ்ப் பற்றை ஊட்டியவர்

வி. க. இளமையில் ஆங்கில மொழியிடத்து மோகம் மிகுந்தவராகவே இருந்தார். ஒன்பதாம் வகுப்பு படித்தபோது ''ஆங்கிலத்தில் நன்றாகப் பேசுதல் வேண்டும், எழுதுதல் வேண்டும்'' என்னும் பித்தும் பிடித்திருந்ததாம். அவரை ஆங்கில நாவன்மையால் உலகையே கவரச் செய்தல் வேண்டும் என்ற ஆவல் அலைத்தது. வி. க. சில நண்பர்களோடு சேர்ந்து ஆங்கிலத்தை வளர்ப்பதற்காக ஒருசங்கமும் அமைத்தாராம், தமிழ்ப்புலவர் சதாவதானம் நா. கதிரைவேற்பிள்ளையின் தொடர்பால் ஆங்கில முழக்கத்திற்காக அமைத்த அந்தக் கழகத்தைத் தமிழ் முழக்கத்திற்கு உரியதாகச் செய்துவிட்டாராம். தம் ஆசிரியர் கதிரைவேற்பிள்ளையிடம் பேரன்பு கொண்ட அவர் 1907 ஆம் ஆண்டில் ஆசிரியர் மறைந்த பின்வேறொரு வரிடம்சென்று தமிழும் சைவசித்தாந்தமும் கற்க இயலாதவராக வருந்தினார். 1908 ஆம் ஆண்டிலே ஆசிரியரின் வாழ்க்கை வரலாற்றை இயற்றினார்; அதுவே அவர்இயற்றிய முதல் நூலாகும்.

### வி. க. வின் பணிகள்

1910 ஆம் ஆண்டிலே ஆயிரம் விளக்குப்பள்ளியிலே தமிழாசிரியராகச் சேர்ந்த வி. க. 1916 ஆம் ஆண்டிலே தம் ஆசான் நா. கதிரைவேற்பிள்ளை ஆசிரியப்பணி செய்த இராயப்பேட்டை வெஸ்லிக் கல்லூரியிலே தலைமைத் தமிழாசிரியராகச் சேர்ந்தார். தமிழிலக்கியத் தொண்டு செய்வதற்கு அதுவே சிறந்த வாய்ப்பாக அமைந்தது அத்துடன் ஆறுதலடைந்திருந்தால் தமிழிற்கு இன்னும் ஏராளம் தொண்டு செய்திருக்கலாம், ஆனால் வி. க. வெஸ்லிக் கல்லூரியிலே சேர்ந்த மறு ஆண்டே அவ்வேலையை விட்டு, ''தேசபக்தன்'' என்ற அரசியல் இதழுக்கு ஆசிரியரானார். காங்ரஸ் அரங்கிலே பேசத் தொடங்கியவர் பின் வாடியாவால் ஆரம்பிக்கப்பட்ட தொழிலாளர் இயக்கத்தில் ஆர்வம் கொண்டார். ''நவசக்தி'' என்ற இதழையும் தொடக்கிப் பின் காலப்போக்கிலே அதை வேறொருவரிடம் கையளித்தார். ''தேசபக்தன்'' ஆசிரியராக வி. க. இருந்த காலத்தே அவருடைய ஆசிரியக்கட்டுரையொன்றைக்கண்ட டாக்டர் சுப்பிரமணிய ஐயர் வியந்து தமிழ் மொழியின் ஆற்றலைக் கண்டேன், என்று பாராட்டினார். தேசபக்தன் இதழ்வாயிலாகத் தமிழ்ப்பற்றை ஊட்டினார். வி க.வே அந்த இதழ் செய்த புரட்சியைப் பற்றிக் கூறுமிடத்து 'தேசபக்தன் தமிழரை அந்நிய

(8-ம் பக்கம் பார்க்க)

அற்புதமான
வடிவமைப்புக்களைக்
கொண்ட
அழகிய தங்க நகைகளுக்கு
நங்கையர் நாடும் இடம்

**நியூ ராதிகாஸ்**
**நகை மாளிகை**
189, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்
(கி/ 1897)

## இலண்டனில் மகிழ்ச்சி தெரிவிப்பு

(இலண்டன்)

தென்மராட்சிப் பகுதியில்படையினர் அண்மையில்மேற் கொண்ட அக்கினிச்சுவாலை-1 இராணுவநடவடிக்கையை விடுதலைப்புலிகள் முறியடித்தமையை வரவேற்குமுகமாக இலண்டனில் வெடிகொளுத்தி மகிழ்ச்சி ஆரவாரம் கொண்டாடப்பட்டதாக சர்வதேச செய்தி ஊடகம் ஒன்று நேறறிரவு தெரிவித்தது.

# ஆயுதக் கொள்வனவு ஊழல் குறித்து விசாரிக்க பாராளுமன்ற தெரிவுக்குழு

(கொழும்பு)

ஆயுதக் கொள்வனவில் இடம்பெற்ற ஊழல் தொடர்பாக விசாரிப்பதற்கு பாராளுமன்ற தெரிவுக்குழு அமைக்கப்படுமென்றும் இதற்கு அமைச்சரவை அங்கீகாரம் அளித்துள்ளதாக தகவல் தொழில்நுட்ப ஊடகத்துறை அமைச்சர் அனுரா பிரியதர்சன யாப்பா தெரிவித்துள்ளார்.

அமைச்சரவையின்மாதாந்தக்கூட்டம் நேற்று கூடிய போதே மேற்படி தீர்மானம் எடுக்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம)

## மகாநதி ஜுவல்லறி

தங்க நகை உலகில்
மங்காப் புகழ் பெற்ற
தங்க ஆபரணங்களின்
சாம்ராஜ்யம்
**மகாநதி ஜுவல்லறி**
72A, கஸ்தூரியார் வீதி
யாழ்ப்பாணம்;
(கி/1896)

### சிங்கள -.

தம் வெளியிடப்படும் 'உலகளாவிய பயங்கரவாதம்'' தொடர்பான அறிக்கையிலேயே மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது:

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது 'அரசாங்கத்தையும் விடுதலைப்புலிகளையும் சமாதானப் பேச்சுவார்த்தையில் ஈடுபடுத்தப் பாடுபட்டவரும், நோர்வேயின் கொழும்பில் உள்ள சிறுவர் பாதுகாப்பு நிதியத்தின் மீதும் சிங்களத் தீவிரவாதிகளே குண்டுத்தாக்குதலை நடத்தியுள்ளனர் என்று அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த அறிக்கை அமெரிக்க தலைநகரான வாஷிங்டனில் வைத்து வெளியிடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (வ)

### மேலும் - - -

ரின் 93சடலங்கள்விடுதலைப் புலிகளால் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கப் பிரதிநிதிகளிடம் ஒப்படைக்கப் பட்டுள்ளதாகவும், மிகவும் பழுதடைந்தசடலங்களை தாம்தகனம் செய்ததாகவும். விடுதலைப்புலிகளின் வன்னித்தலைமையகம் நேற்று வெளியிட்ட அறிக்கையில் தெரிவித்துள்ளது:

கையளிக்கப் பட்ட சடலங்கள் பிரமனாளங்குளம் சோதனைச் சாவடியூடாக எடுத்து வரப்பட்டு வவுனியாவில் இராணுவத்தினரிடம் கையளிக்கப்படும். என்றும் அவ் அறிக்கையில் தெரிவிக்கப் பட்டுள்ளது. (இ)

### ஊரடங்கு - - -

சட்டம் அமுல்படுத்தப்பட்டதையடுத்து கொழும்பு நகருக்கு வந்திருந்த பிரயாணிகள் பெரும் சிரமத்திற்குள்ளானாரென தெரிவிக்கப்பட்டுள்ளது:

வெளியிடங்களில் இருந்து கொழும்பு வந்திருந்த பெருமளவு பிரயாணிகள் தமது சொந்த இடங்களுக்கு திரும்பிச் செல்ல முடியாது பஸ்களின் கூரைகள் மீது ஏறி பயணம் செய்தார்கள் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (வ)

### படையினர் - . .

தாக்குதலின் போது காயமடைந்த 5படையினரும் வைத்தியசாலையில் அனுமதிக்கப் பட்டுள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது

இதேவேளை புத்தூர்பகுதியில் சந்தேகத்திக்கிடமான பொருட்களுடன் நடமாடிய ஒருவரைபடையினர் கைது செய்திருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம)

### ஆரம்பிக்கப் - -

யில் புதிய புலிகள் என்ற பெயரில் இயங்கி வந்த அமைப்பானது பிளவுபட்டு, தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் தலைமையில் தமிழீழ விடுதலைப் புலிகள் என்ற இயக்கம் உதயமானது.

1976ஆம் ஆண்டுமேமாதம் 5ஆம் திகதி விடுதலைப்புலிகள்இயக்கம்ஆரப்பிக்கப்பட்ட போதும் ஈழ விடுதலைப் போரில் 27.11.82 லேயே முதல் போராளிபலியானார்;

1980ஆம் ஆண்டிற்கு முன்னர் இவர்கள் தலைமறைவுச் செயற்பாடுகளில் ஈடுபட்ட போதிலும் அதற்குப்பின் இவர்களது செயற்பாடு பகிரங்கமாகவே இடம்பெற்றது.

இலங்கை இராணுவத்தினருடன் 3வது ஈழப் போரை நடாத்தி வரும்புலிகள் 1987 பிற்பகுதிமுதல்1989பிற்பகுதி வரை இந்தியப் படைகளுடன் மோதல்களில் ஈடுபட்டனர்.

27.11.82முதல் கடந்தவருடம் மாவீரர் நாள் ஆரம்பிக்குமுன்னர் (20.11.00வரை) 18 வருட ஆயுதப் போரில் 16599 போராளிகள் உயிர்த்தியாகம் செய்துள்ளதாகவும்,

இக்காலப்பகுதியில்13192 ஆண்களும் 3407 பெண்களும் உயிர்தியாகம் செய்துள்ளனர் இதில் ஈரோஸ் அமைப்பைச்சேர்ந்த 266 பேரும்தனி குழுக்களைச் சேர்ந்த பத்துப் பேரும் அடங்குவர், (ம)

### தலைநகர் - .

அதனை அடக்குவதற்காக பொலிஸார் கண்ணீர்ப்புகை, குண்டாந் தடிப்பிரயோகமும் மேற்கொண்டனர். இதனை அடுத்து 25முஸ்லிம் இளைஞர்களும் பொலிஸாரும் காயமடைந்துள்ளனர்:

#### ஊரடங்கு பிறப்பிக்கப்பட்டது

இம் மோதல்களின்போது பொலிஸார் வானத்தை நோக்கிச் சுட்டதுடன் றபர்ச்சன்னங்களினாலும்சுட்டனர்; இதன்போது முஸ்லிம் இளைஞர்கள் காயமடைந்தனர்: மேலும் வன்செயல்கள்வெடிக்காவண்ணம் உடனடியாக ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுரோந்து நடவடிக்கைகள் பலப்படுத்தப்பட்டன.

புறக்கோட்டை சென்றல் வீதியில் 04 பஸ் வண்டிகளும் கிராண்ட்பாசிலும் 03பஸ்களும் அடித்து நொருக்கப் பட்டதுடன் மாளிகவத்தையில் எரிபொருள் விற்பனை நிலையமும் சேதமாக்கப் பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மருதானை, ஆமர் வீதி, கிராண்பாஸ், புதுக்கடை, தெமட்டகொடப் பகுதிகளில் உள்ள கடைகளைபூட்டுமாறு ஆர்ப்பாட்டகாரர்கள்கோரியிருந்தனர் இதனை அடுத்து கடைகள் யாவும் மூடப்பட்டன இப்பகுதியில் ஏற்பட்ட பதற்ற நிலையை அடுத்து கம்பஹா, கொழும்பு, களுத்துறைமாவட்டங்களில் நேற்று மாலை 6 மணி முதல் ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப் பட்டுள்ளது.

#### அமைதிகாக்க தலைவர்கள் வேண்டுகோள்

சலகம் இடம்பெற்றபகுதியில் 3ஆயிரத்திற்கும் அதிகமான பொலிசாரும் இராணுவத்தினரும் ரோந்துப் பணியில் ஈடுபட்டுள்ளனர்.

இதேவேளை எதிர்க்கட்சித் தலைவர் ரணில்விக்கிரமசிங்கா, அமைச்சாபெளஸிமற்றும் சிங்கள,முஸ்லிம் தலைவர்கள் அமைதி பேணுமாறு அவசர வேண்டுகோள் விடுத்துள்ளனர்; (வ)

## மாவனல்ல இழப்புக்கு விரைவில் நட்டஈடு

(கொழும்பு)

மவனல்லவில் சிங்களமுஸ்லிம் கலவரங்களால் ஏற்பட்டஇழப்புக்களுக்கு19நாடுகளுக்குள் நஷ்டஈடுவழங்கப்படுமென இனவிவகாரதேசிய ஒருமைப்பாடு கனிப்பொருள் மூலவளஅமைச்சர்அத்தாவுட செனிவிரத்ன தெரிவித்துள்ளார்.

அப்பகுதியில் தேசியப்பாடசாலைஒன்றில் பிரமுகர்களுடன் நடாத்திய சந்திப்பின் போது அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இச்சம்பவம் தொடர்பாக எவராவது அகதிகளாகஇடம் பெயர்ந்தால் அவர்களுக்கு தேவையான சகலவசதிகளும் செய்துதரப்படும்என்றார்.

இச்சம்பவத்திற்கு காரணமான மாவனல்ல கடை உரிமையாளரின்வாய்வெட்டபட்டதாகக் கூறப்படும் சம்பவம் குறித்துஐவர்கைது செய்யப்பட்டதாக பொலிஸ்சார் தரப்பில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

''கன்னித் தமிழ் வேர்களுக்குள் முத்தெடுப்போம்
காலம் தோறும் முத்தம் பதிப்போம்''

**யாழ் திருமறைக் கலாமன்றம்**
நடத்தும்
**தமிழ்விழா - 2001**
சிறப்புக் கருத்தரங்குகள்

காலம்: 07 - 11 மே 2001
இடம் : திருமறைக் கலாமன்ற கலைத்தூது மணிமண்டபம்
நேரம்: தினமும் மாலை 5:00 மணி

- 07 05 2001 திங்கள் (நாடகவியல்) 'போர்த் தோல்ற் பிறெஃற் ஒரு மீள்பார்வை'
- 08.05.2001 செவ்வாய் (இலக்கியம்) 'தேம்பாவணியில் பெண்கள்'
- 09 05.2001 புதன் (பண்பாடு) 'பின் நவீன கால ஒழுக்க நெறி'
- 10.05.2001 வியாழன் (உளவியல்) 'இருப்புசார் சிர்மியம்'
- 11.05.2001 வெள்ளி (சைவ சித்தாந்தம்) 'நெஞ்சுவிடு தூது'

கருத்துரை வழங்குபவர்
பேராசிரியர் நீ. மரிய சேவியர் அடிகள்

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்
திருமறைக் கலாமன்றம்
238, பிரதான வீதி,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி - 2393

## மரண அறிவித்தல்

### கதிரவேல்-அம்பலவாணர்

அற்கின்சன் வீதி வட்டு தென்மேற்கு வட்டுக்கோட்டையை பிறப்பிடமாகக் கொண்ட கதிரவேல் அம்பலவாணர் நேற்று (4-05-2001) கொழும்பில் காலமானார். அன்னார் காலஞ் சென்றவர்களான கதிரவேல் இராசம்மா தம்பதியின் அன்பு மகனும், சரஸ்வதி தேவியின் அன்புக்கணவரும்,கதிரவேல்((E.SP அன்கோ யாழ்) செல்வராணி, பிறேமராணி, கேமராணி ஆகியோரின் அன்புத்தந்தையும் நாகேஸ்வரி,காலம்சென்றவர்களான புவனேஸ்வரி, சிவசிதம்பரநாதன்[போனியோ) மகேஸ்வரி, சண்முகசுந்தரம் ஆகியோரின் அன்புச் சகோதரரும் மற்றும் கந்தசாமி, காலஞ்சென்ற பஞ்சாட்சரம் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்;

அன்னாரின் இறுதிக்கிரியை பற்றியவிபரம் பின்னர் அறிவிக்கப்படும்;

தகவல் -
அ.கதிரவேல்(பேபி)
(மகன்)

வட்டு தென்மேற்கு:
வட்டுக் கோட்டை,

(கி - 1957)



எழில் குன்றா அழகிய தங்க நகைகளை அசல் 22 கரட்டில்
செய்து பெற்றுக்கொள்ள யாழ் நகரில் - - - - -

**நியூ நகுலா ஜுவல்லறி**
74, கஸ்தூரியார் வீதி, - - - - - யாழ்ப்பாணம்.

**நியூ லலிதாஸ் ஜுவல்லறி**
171, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

[கி-1954]

**நகுலா நகைமாடம்**
241G, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

இப்பத்திரிகை ''வலம்புரி'' அன்கோ ஸ்தாபனத்தாரால் இல. 15, வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம்எனும் விலாசத்தில் அமைந்துள்ள அவர்களது அச்சகத்தில் 2001 ஆண்டு மே மாதம் 05ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது